# Bringing Tamil Literature Online : Status report on Project Madurai

Kumar Mallikarjunan
Biological Systems Engineering Department
Virginia Polytechnic Inst. & State University
Blacksburg, VA, U.S.A.

K. Kalyanasundaram
Institute of Physical Chemistry
Swiss Federal Institute of Technology
1015 Lausanne, Switzerland

SUMMARY

Electronic versions of printed texts (abbreviated as ETexts) of ancient literary works are important pedagogic and scholarly resources. Stored in easily accessible archives, they permit preservation and wider distribution of ancient literary works around the globe through the means of Internet. Etexts of literary works also allow quick search for phrases, words, and combinations of words in any literary work.

"Project Madurai", an open and voluntary initiative, was started from January 1998 to collect and publish free electronic editions of ancient Tamil literary classics. Most of the released works have been typed-in by volunteers around the world. Archival of the Etext is being done in one of the most readily accessible formats (Plain text, web pages and PDF files) for use on all popular computer platforms. Anyone located anywhere may download a copy for personal use or read what we publish on the Internet, free of charge. Major emphasis is given to produce Etexts of the Tamil Literary classics in native Tamil script.

Volunteers around the world coordinate the project; most of them have the Project Madurai as their hobby. Currently we have 200 volunteers. Up to date, we have released about 200 works totaling around 8000 pages. Various issues related to this grand project were presented in this paper.

## INTRODUCTION

Electronic versions of printed texts (abbreviated as Etexts) of ancient literary works are important pedagogic and scholarly resources. Stored in easily accessible archives, they permit preservation and wider distribution of ancient literary works around the globe through the means of Internet. Etexts of literary works also allow quick search for phrases, words, and combinations of words in any literary work.

Several etext archiving projects have been taking place world wide particularly in the last five years. There are already a handful of etext archiving projects of Tamil works, some by major universities:

- Univ. of Cologne, Germany (http://www.rrz.uni-koeln.de/phil-fak/indologie/index.e.html)
- Univ. of California, Berkeley (http://tamil.berkeley.edu/)
- Inst. of Asian Studies, Chennai (http://xlweb.com/heritage/asian/index.htm#projects)

- National Univ. of Singapore and International Inst of Tamil Studies (http://irdu.nus.edu.sg/tamilweb/sangam/tamil_unicode.html)

And by a handful of individuals:

- Dr. Thomas Malten and colleagues at the Institute of Indology and Tamil Studies (IITS) of the Univ. of Cologne, Germany have already made phenomenal progress in electronic archiving of Tamil literary works and have the most extensive collection of electronic texts in Tamil in transliterated format ever made. A few of these works are available in entire form for download. The gopher server at IITS does provide word search for a large number of early Tamil literature (Sangam and post-Sangam period).

- Dr. Parthasarathy Dileepan of Tennesse, USA enlisted the assistance of volunteers through the newsgroup soc.culture.tamil and has produced the transliterated etext version of the entire Nalayira Divya Prabhandam.

- Mani Varadarajan has a Web page devoted to Vaishnavism. Etexts (transliterated/roman) of a number of vaishnavaite literary works are available there.

- English translation of thirukuRaL The Tamil Web page of Janahan provides a pointer to English translation of thirukuRaL produced by the Himalayan Academy.

- Siddharth Ramachandramurthi has a Web page on where the entire thirukuRaL work is displayed in the form of GIF images. The Web page allows word check on the entire thirukuRaL.

- Ganesh Subramanian has put up web pages devoted to Saiva Siddhantha wherein he is trying to provide transliterated (ITRANS) version of various thirumarais on line.

- The story related to and the transliterated version of Abirami Andadhi (keyed in by Mrs. Vijayalakshmi Mallikarjunan) and songs of Papanasam Sivan are available at the Web page put out by Mallikarjunans.

Through postings in the soc.culture.tamil (Usenet), tamil.net (email discussion list) and webmasters list, many expressed the desire to start similar projects, targeting ancient Tamil literary classics. Based on interests through the mailing lists tamil@tamil.net and webmasters@tamil.net, the idea for one grand project emerged. The goals of the project were to coordinate scattered activities such as mentioned above. With like-minded persons expressing interest, the "Project Madurai", an open and voluntary initiative, to collect and publish free electronic editions of ancient Tamil literary classics, officially took off on Pongal (Tamil New Year) day of Jan. 14, 1998. Since its inception, Project Madurai has been working hard to bring many Tamil classics to digital world.

In this paper, authors will attempt to give a brief overview of issues related to building digital collections of Tamil works and status report on Project Madurai activities.

BUILDING DIGITAL COLLECTIONS OF TAMIL WORKS WORLDWIDE

In building digital collections of Tamil works, various organizations and individuals have attempted (look at the partial list given in the previous section) to use variety of approaches including encoding, presentation format and duplication of efforts. These are some major issues that need to be addressed in any present or future efforts by the international body interested in building digital or virtual library.

## Encoding Format:

Currently, the digital collections available through Internet resources (gopher, web and FTP servers) use varying degrees of encoding standards. They include, bud not limited to, Mylai, Adhawin, Tamilnet, WebTamil, Amutham, Murasu and etc. With the improvement in information technologies in delivering various font faces, newer encoding systems are mushrooming up every day.

In order to bring the digital collections for good uses like research, retrieval and searching, encoding format options should be limited to one or two standards. Glyph based encoding standards like TAB/TAM or TSCII, character-based encoding standards like Unicode. There is an increasing popularity for Unicode based fonts due to the adaptation of this in Macintosh and Microsoft (Windows 3.xx/95/98/NT) platforms. Text converters are available to go between these formats. These converters should also provide support for standard Romanized transliteration schemes as well.

## Presentation, Distribution and Archiving Formats:

With recent advances in browser technology, presenting Tamil texts in GIF images have phased out and on line documents are using many different techniques to present the Tamil. Web versions based on HTML using FONT FACE definitions have been used widely since HTML 3.0. This limited the presentation on line due to the need of the specific font face in the clientருs computers.

After HTML 4.0, newer ways of presenting the text (e.g. using META tags, or using cascade style sheet or CSS specifications) have been explored. The use of META tags or Style Sheets helped the use of set of fonts (FONT families) that use a specific encoding (e.g. TAB or TSCII). With this, the recent developed standards could be used widely. Still, this method requires the font files in the clientருs computer. However, the user could use the font of his choice to view the files.

Recently, dynamic font rendering techniques have been explored due to its advantage of not needing the specific font file in the clientருs computer. Newer developments including extensible markup language (XML), wireless markup language (WML), user interface markup language (UIML), many other alternatives are being sought for presenting Tamil documents on line.

Distribution of etext files as plain text (either in Tamil or as Romanized transliterated) has been practiced by many services including Project Madurai. However, with the need for distributing the digital works as formatted, available options are as web pages or as Adobe Acrobat portable document format (PDF) files. Use of PDF files can be more useful due to lack of dependence of specific font files in the client computers, and incorporation hypertext and search capabilities in the PDF files.

## Searching:

Currently, very limited search engines (bilingual) exist to locate the availability of a given work as etext and also to locate specific words or word sequences in archived texts due to the lack of standards or adopting such standards. Recent developments in encoding standards (TSCII and TAB/TAM) would provide opportunities for such search engines for extensive Tamil literature available on line.

## Duplication and Reproduction:

The major problem that exists today with building digital collections is lack of coordination or collaboration among various organizations. Due to this many works have been duplicated at many places. To overcome duplication efforts, a fixed collaboration mechanism for regular exchange of information on etext collections should be made by different efforts. Reproduction of etexts from collections of one project elsewhere and in other projects and also in various websites should be critically addressed. Project Madurai coordinators have been approached by many profit organizations to reproduce the content in their sites. With the goal of providing the services free of charge, we have kept our promise by not letting profit organization to reproduce the contents of Project Madurai. However, we have not ruled out for a central database (or links) for different worldwide-scattered efforts by agencies such as INFITT.

Yet another issue regarding building digital documents is copyright. In relation to ancient works published in the recent days, the questions on who hold the copyright and for what? remains to be solved. In many instances, it is assumed that the publishers of today can claim copyright for explanations and presentation format, but not for the old Tamil literature. However, when considering developmental works in bringing old Tamil literature in palm leaves to digital world, the copyright should be given to the persons responsible for deciphering the palm leaves. It still remains controversial and an international body along with respective governments should mediate in these situations and formulate some standards.

## STATUS OF PROJECT MADURAI

Since its inception, Project Madurai has more than 200 works totaling more than 8000 pages. Most of the released works have been typed-in by volunteers around the world. Archival of the Etext is being done in one of the most readily accessible formats (Plain text, web pages and PDF files) for use on all popular computer platforms. Anyone located anywhere may download a copy for personal use or read what we publish on the Internet, free of charge. Major emphasis is given to produce Etexts of the Tamil Literary classics in native Tamil script.

## Scope:

Scope of coverage include ancient and modern times, works of all religions/faiths (Hindu: Caivaite and Vaishnavaite; Christian, Islam, and Jain). On the choice of works, the main criteria would be honoring of copyright protection given to authors. Even though the copyright rules vary from country to country, in most of the etext archiving projects, elapse of at least 50-70 years after the death of the author is considered a safe criterion. So, as a rule of thump, Project Madurai considers works of authors who died before 1929. Hence is the tilt for archiving ancient Tamil literary classics.

The second main reason for going for ancient literature is that they are out of print and hence stand the risk of getting lost to the world. 20th century Tamil literature is largely dominated by novels and associated decrease in the sale of printed copies of ancient literary works covering other domains. Key publishing houses such as Saiva Siddhantha Trust have dropped several of their projected reprinting of classics for lack of market. Few university libraries have copies that were printed in twenties or thirties. In the absence of adequate storage facilities these works are being eaten away by insects. Tamil language has a rich heritage dating to several thousand years. We all have a moral obligation to ensure that the future Generations do have access to this rich treasure, possibly via better means of archival and world wide distribution. Having said this, any ancient literary work for which we can find a hard/printed copy and importantly volunteers to key-in the text can be considered for inclusion in the archives.

As regards to modern literary works, they can be included provided the concerned author (or their legal heirs) is prepared to give explicit written consent for the work to be put up in electronic form and for unrestricted, free distribution on the internet (e.g. yogi Sudhdhanatha Bharathi, Vairamuthu, Uthayanan). In addition, modern works of Sri Lankan Tamil authors have been included. Through special arrangements with the nearest kins, Tamilnadu Govt. has placed "in public domain" the works of select Tamil authors of 20th C - Bharathiyar, Bharathidaasan, Annadurai, Namakkal kavingar Ramalingam pillai and few others. Hence these works are included in the project.

## Volunteers

Project Madurai is based on voluntary cooperation between many people in several countries. Currently, the project has about 200 volunteers from countries including, but not limited to, United States of America, Canada, Switzerland, Germany, England, Japan, Singapore, Malaysia, Australia, New Zealand and India.

## Modus Operandi for Preparation and Proof-reading of Etexts

Volunteers interested in a particular work are given the hard copies of the work. They work with regional volunteers and project leaders. Proof reading of the texts was done preferably by another group of volunteers. The etext files carry explicitly in the header part the

person(s) actually involved in the keying in of the text and also the person(s) involved in the proof reading part. If possible the header also indicates the hard copy details (publisher, year etc) used as a reference for proof-reading/editing.

## Font Encoding Used

The project is committed to using the Tamil Standard Code for Information Interchange (TSCII) as the encoding format for the archives. The reasons for limiting the choice to TSCII are:
(a) Over 90% of the Tamils worldwide use one of these; (b) fonts are available free for use on all of the three major computer platforms - Windows, Macintosh and Unix. Anyone who uses these computers can work in all of these formats; and (c) Convertors are available that work reliably to go between many other font formats to TSCII. The goal is to let the volunteers work in the environment (font and computer system) he/she feels comfortable with. Very minimal constraints if any will be imposed on the volunteers who will do the major task of keying in of texts.

## Associated Mailing List

A mailing list (pmadurai@egroups.com) exists as a forum to discuss related issues and all the volunteers involved with Project Maduari are members of this mailing list. Issues related to software for inputting, selection of work, locating volunteers interested in a particular work are addressed in the mailing list.

## CONCLUSIONS

In conclusion, the authors would like to address various issues related to building digital collections of Tamil literary works including font encoding, presentation and distribution formats, duplication and reproduction and copyright in this International forum. The authors propose to have an international body like INFITT to coordinate various efforts to address the above-mentioned issues. The authors provided the status of a grand project 'Project Madurai' and how it addressed many of the issues.

# மின்வெளியில் தமிழ்ச் சமூகப் பரிணாமம் - இயற்கைத் தேர்வு முகவர்களின் தேவை

முனைவர் நா,கண்ணன்,
ஸ்டுட்காட், ஜெர்மனி

சுருக்கம்: மின்வெளியில் உலாவரும் தமிழனின் புதிய நில அமைவும், புதிய சுதந்திரமும், புதிய சமுதாயமும் கண்டுகொள்ளப் பட்டு, மின்வெளிச் சமுதாயம் என்பது தமிழ் மனம் காட்டும் கண்ணாடி என்பது அவதானிக்கப் படுகிறது. நிஜவாழ்வின் நகலாக மின்வெளி இருந்தாலும், மின்வெளிக் கண்ணாடி என்பது உருவகம் அல்ல. அது நிஜ மனிதனின், நிஜப் பிரதிபலிப்பு. தன் முகம் கண்டு தெளியும் தமிழனின் எதிர்காலப் பரிணாமம் இவ்வூடகத்தைப் புரிந்து கொள்வதில் அமைகிறது. தகவல் தொழில் நுட்பம் தரும் "நகல்நிஜம்" (விர்ச்சுவல் ரியாலிடி) புண்பட்டுப் போன புகலிடத் தமிழனுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையப் போவது முன் கண்டுகொள்ளப் படுகிறது. போர், வன்முறை, மனித உரிமை மீறல்கள் இவைகளுக்கு மாற்றாக நகல்நிஜத் தொழில் நுட்பம் முன்மொழியப் படுகிறது.

தோற்றம்: தகவல் புரட்சியானது குமுறும் எரிமலை போல் வெடித்துச் சிதறும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த தகவல் புரட்சிக்கு வேராக அமைபவை, கணினி, தொலைத் தொடர்பு, ஊடகங்கள் என்பவை.


கணினி என்பது விஞ்ஞானிகளும், தொழில்நுட்பனரும் மட்டும் பயன்படுத்தும் பொறிகள் என்ற நிலை கடந்து சகலரும் பாவிக்கும் ஒரு நுகர்பொருள் ஆகிவிட்டது. கணினியை இயக்கும் சில்லுகளின் திறன் ஒவ்வொரு வருடமும் இரட்டிக்கிறது என்பது நிகழ்வு. காந்த-ஒளிச் சேமிப்பு முறைகளின் மூலம் கணினிச் சேதிகளின் வைப்பு எளிதாகவும், பல மடங்கு கூடுதலாகவும் பாது காக்கப் படுவதற்கான தொழிற்திறன் வந்துள்ளது. இதே கதியில் கணினிச் செய்திப் பரிமாற்றமும் ISDN முறையில் நொடிக்கு 64 கிலோபைட்டிலிருந்து ஒளிபரப்பு (ஆப்பிட்டிகல்) முறையில் நொடிக்கு ஒரு கிகாபைட்டிற்கு மேலாக பரிமாறும் வாய்ப்புகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. செயற்கைக் கோள்கள் வழியாக கம்பியில்லாத் தகவல் பரப்பு என்பது போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது. வன், மென்பொருட்கள் துறையிலும் அளப்பரிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கணினியையும், பயன்படுத்துனரையும் இணைக்கும் உணர்பொறிகளும், காட்சிக் கலன்களும் புதிது புதிதாய்த் தோன்றிய வண்ணமுள்ளன. மென்பொருளாலர்களின் திறத்தால் இயற்கை அறிவு என்பது எட்டும் தூரத்தில் உள்ளது. முப்பரிமாண கணினி சார் உலகம் என்பது தொடுவானத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறது.

தொலை தூர தகவற்றுறையோ புறாவைத் தூதுவிட்ட கால கட்டத்திலிருந்து, தபால், தந்தி என்று மாறி, தொலைபேசி, தொலைக்காட்சி என உருவெடுத்து "நினைத்த பொழுது தகவல் பரிமாற்றம்" (1) செய்யும் நிலைக்கு வந்திருக்கிறது.

ஊடகங்களும் மாறுகின்றன. எழுதாக் கிளவி என்னும் செவி வழி தகவல் மாற்று முறை, சுட்ட ஓட்டுப் பலகைகளில், பனை ஓலைகளில், கற்தூண்களில் எழுதி மனிதனின் சிந்தனைப் பாரம்பரியம் காக்கப் பட்டுள்ளது. காகிதம் வந்த பிறகு புத்தகங்கள் பெரும் அளவில் அச்சிடப் பட்டு வெளிவருகின்றன. இதன் அடுத்த கட்டமாக மின் பதிப்பு வந்துள்ளது. மின் பதிப்பு

காலத்தால் அழியாத தன்மையும், நீர், நெருப்பால் நெருங்காத் தன்மையும், அள்ள, அள்ளக் குறையாத தன்மையும் கொண்டு சாகாவரம் பெற்ற ஊடகப் பரிமாற்றமாக உருவெடுத்து ள்ளது.

இவ்வாறான கணினி, பதிப்பு, தொலைபரப்பு, ஊடகம் என்பவையும் கூடும் காலம் நாம் வாழும் காலம். உதாரணமாக எழுதுதல், கணினி, மற்றும் தொலை பரப்பு கூடும் போது மின் அஞ்சல் பிறக்கிறது. பல் ஊடகப் புணர்வில், எழுத்து, ஓவியம் (வடிவம்), ஒலி, இவை கூடி நிகழ்வாக (ஆன்லைன்) மாறுகின்றன (படம் 1).





படம்1: தகவல் தொழில் துறையின் அங்கங்கள்

இதற்கு அடுத்த கட்டமாக இவை கூடும் சங்கமம்தான் "நகல் நிஜம்" (விர்ச்சுவல் ரியாலிடி) என்பது (படம் 2):

மின்வெளித் தமிழ்ச் சமூகம்: மின் அஞ்சல்த் தொடர்பு மலர்ந்த போது அதைக் கருவியாக வைத்து தமிழ்ச் சமூதாயம் ஒன்று உருவானது. உலகின் பல பாகங்களில் வாழும் தமிழர்கள் தங்கள் அகக்கணினிகள் மூலம் வெளி உலக மனிதர்களுடன் நினைத்த மாத்திரத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள மின்வெளியில் கிராமங்கள் அமைக்கத் தொடங்கினர்.

தனி மனிதர்களின் கருத்துக் கூடும் சூட்சும வெளியாக இது அமைந்தாலும், மனத்தளவில் இது மனிதர்கள் கூடும் வெளியாகவே செயல் படுகிறது. எழுத்து என்னும் வெளிப்பாடைக் கொண்டு வெற்றிகரமாக செயல் பட்டு வரும் ஒரு ஜீவ இயக்கமாக தமிழ் இணையம் (http://www.tamil.net/) எனும் சமூகத்தைச் சுட்டலாம்..

தண்டல்காரர் இல்லாத, கட்டுப்பாடு இல்லாத ஒரு இணையமாக இது இன்றுவரை செயல்பட்டு வருகிறது. தமிழ் இணையம் என்பது தமிழனின் அரசியல், கலாச்சார, ஆன்மீக, இலக்கிய வெளிப்பாடுகளின் தரிப்பிடமாக இருக்கிறது. தமிழ் இணையம் என்பது தற்காலத் தமிழனின் மன உளச்சலை நன்கு பிரதிபலிக்கும் கூடமாக செயல் படுகிறது. இணையத்தின் ஆரம்ப கட்டங்களில் தமிழின் தொன்மை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமும், அதன் ஆன்மீகச் சிறப்பைப் புரிந்து கொள்ளும் ஆர்வமும் மிகுதியாக வெளிப்பட்டாலும், சில ஆண்டுகளில் அது




படம் 2: நகல்நிஜம் என்பது ஊடகம், தொலைபரப்பு, கணினியின் துணை கொண்டு நிஜ உலக அனுபவங்களை, நுகர்பவர் இயைவுடனும், ஒத்து ழைப்புடனும் செயற்கையாக நடத்திக் காட்டுவது.

பிராமண-பிராமணர் அல்லாதார் சச்சரவுப் பாசறையாக மாறிப் போனது. தமிழ் இணையத்தில் பிராமண வழி நடத்தல் என்ற ஒன்று இல்லாத போதும் தமிழ் நாட்டு நடப்பு அரசியல் பின் விளைவாக இச்சச்சரவு வெளிப் பட்டது. இதே போல் மத இணக்கம் என்பது மேலோட்டமாக இருந்தாலும் இந்திய உபகண்டத்தின் சரித்திர உளைச்சலான இந்து-இந்து அல்லாதார் பிணக்கு தமிழ் இணையத்திலும் உக்கிரமாக வெளிப்பட்டது. தமிழ் நாட்டைப் பாதிக்கும் பல பிரச்சனைகள் தமிழ் இணையத்தில் அதே சூட்டுடன் வெளிப் படுவது அவதானிக்க வேண்டிய ஒன்று. இந்திய-இலங்கை உறவு பற்றிய பிரச்சனை பல வாரங்களாக விவாதிக்கப் பட்டுவரும் பிரச்சனையாகும்.

மின்வெளியில் இயங்கும் தமிழ் இணையம் என்பது தமிழனை பிணைக்கும் ஊடகம் என்பதில் சந்தேகமில்லை. அது சில நேரங்களில் லாகிரி போல் பலரை கட்டி வைத்திருந்தாலும், கஷாயம் போல் பலரை கசப்பு உணர்வுடன் வெளியேற்றவும் செய்துள்ளது. இப்படி நிகழ்வதற்குக் காரணங்களைக் காண்போம். மனிதன் என்பவன் அடிப்படையில் சிந்தனை ஜீவி, உணர்வு சார் ஜீவி. பல நேரங்களில் மின்வெளி நிகழ்வுகள் வெறும் கருத்து வடிவங்கள் என்பது மறந்து போய் தனி மனிதத் தாக்குதல்களாக உள்வாங்கப் பட்டு, நிஜ வாழ்வின் கிராமத்துச் சண்டைகள் போல் வன் எழுத்துக் கொண்டு கொச்சை படுத்தப் பட்டுள்ளன.

இதன் உளவியல் பரிமாணம் ஆழ்ந்து நோக்கத் தக்கது. மின் எழுத்தாக உலாவரும் தமிழனின் கருத்து பொதுவாக தனிமனித அடையாளம் கொண்டு உலா வந்தாலும், தமிழன் விரைவில் மின் ஊடகத்தை ஒரு காப்பாக மாற்றி முகமூடிகள் அணியக் கற்றுக் கொள்கிறான். இந்நிலையில்,

ஒரே நபர் பல பேர்களில் உலாவரத் தொடங்கி, இணையத்தின் நிஜத் தோற்றத்திற்கு ஒரு மயக்கம் தந்து, மாயத்தன்மையை தருகின்றனர். இதை ஒரு ஆயுதமாக பயன் படுத்தி மிகக் கீழ்தரமான வன் கும்பல் போர்த்தளமாக இணையத்தை பயன் படுத்திய காலமும் சரித்திரத்தில் பதிவாகிறது.

இணையத்தின் போக்கை, அதன் வெளிப்பாடை, அதன் செயல்பாடை அவதானிக்கும் ஒருவரால் கண்டுகொள்ளப் படும் ஒரு கருத்து, தமிழ் இணையம் என்பது தமிழ் மனத்தின் கண்ணாடிப் பரப்பு என்பதே. இது வெறும் உருவகம் அன்று. உண்மையும் கூட. கண்ணாடியில் தெரிவது ஒருவரின் பிம்பமே. நாம் முகமூடி அணிந்தாலும் வெளிப்படுவது நமது பிம்பமே. இக்கண்ணாடி பிரதிபலிப்பது தமிழனின் கூட்டு மனத்தைத்தான். இப்பிம்பத்தை மீண்டும், மீண்டும் பார்த்து அலசும் போது தனிமனித விடுதலை சாத்தியமாகிறது. இச்சாத்தியப்பாடு தண்டல்காரர் இல்லாத சமூகத்தில் இன்னும் தூய்மையுடன் வெளிப்படுகிறது. ஏனெனில், நிஜ உலகில் நடக்கும் பரிணாமம் என்பது பல்லாயிரம் ஆண்டு நிகழ்வு. மனிதன் என்பவன் இயற்கைத் தேர்வின் முகவராக மாறும் போது சில விலங்குகளில் பரிணாம மாற்றங்களை சில தலைமுறைகளில் சாதித்துக் காட்ட முடிகிறது (உம். நாய், குதிரை, பரிசொதனை விலங்குகள்). மின்வெளி அரங்கில் நிகழும் பரிணாமம் என்பது மிக துரித கதியில், சில மாதங்களில் அல்லது சில மணித்தியாலங்களில் நடைபெறுகிறது. மின்வெளிச் சமூகப் பரிணாமம் என்பதும் இத்தகையதே. இதில் கண்காணிப்பாளர் உள்ள சமூகம் தனி மனித வழி காட்டலில் நிகழும் பரிணாமம் (சோதனைச் சாலை விலங்குகளுக்கு நிகழ்வது போன்று). கண்காணிப்பாளர் இருந்தும், அவரது தலையீடு இல்லாத சமூகத்தில் நிகழும் பரிணாமம் இயற்கையானதும், முழுமையானதுமாகும்.

மின்வெளிச் சமூகம் தனது பலத்தையும், பலவீனத்தையும் நிஜ வாழ்வில் கண்டு முன்னேறுவதை விட மின்வெளியில் விரைவில் கண்டு முன்னேற வாய்ப்புண்டு. நிஜ வாழ்வுப் பரிசோதனைகளின் விலை, பெரும்பாலும் மனித உயிர்களாக அமைகின்றன. மின்வெளியில் காயப்பட்டு பலியாவது மனித பிம்பமே. இருப்பினும், மனிதன் அறிவு ஜீவி என்பதால், பிம்பத்தின் மூலமாகப் பட்டு அறியும் தெளிவு உண்மையான உளவியல் தெளிவே. அது தமிழனை உயர் பரிணாம நிலைக்குக் கொண்டு செல்லும் வாய்ப்புள்ளது. இணையத்தின் இந்த உளவியல் பரிமாணத்தை உள்ளிருந்து கண்டு அனுபவித்தால் பல்லாண்டு கால கலாச்சார, வர்க்க/சாதி பதப்படுத்தலிலிருந்து தமிழ் இனம் விடுதலை பெற்று உயர்வுற வழி இருப்பது தெரியும்.

நகல்நிஜமும், தமிழனின் புலம் பெயர்வும்: இலங்கை இனப்பிரச்சனையின் உக்கிரம் தாங்காமல் தாயகம் விட்டு வெளியேறியவர் பலர். கல்வி, வேலை வாய்ப்பு கருதி வெளியேறிய தமிழர்களும் உண்டு. போர்ச்சூழலில் நாடு திரும்ப முடியாமல், திரும்பினாலும் சொந்த நாட்டிலே அகதி போல் வாழும் நிலை போன்றவை ஈழத்தமிழர்களின் உள்ளத் தெம்பை வெகுவாக பாதித்து ள்ளன. புலம்பெயர் நாட்டிலுள்ள சட்ட ரீதியான கெடுபிடிகள், கலாச்சார வேற்றுமைகள், வேலை வாய்பின்மை போன்றவை எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போலுள்ளன. மேலும் புலம்பெயர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாக உள்ள குடும்பங்களில் அடுத்த தலைமுறையினர் வந்து விட்டனர். இவர்களில் பலர் வளரும் நாடுகளின் விழுமியங்களை உள் வாங்கிக் கொண்டு வளர்வதாலும், தாயகத்தை ஒப்பு நோக்கும் போது அதிக சுதந்திரம் கொண்டும் வாழ்வதாலும், தலைமுறைப் பிரச்சனை என்பது புதிய தலைவலியாக புகலிட சமூகத்தில் உருவாகிவருகிறது. 60 வயதைத் தாண்டிய பெரியவர்கள் தனிமைப் பட்டுப் போயும், இப்போது நடு வயதில் உள்ளவரும் பின்னால் தனிமைப் பட்டுவிடுவோம் என்ற உளவியல் நோயால் பாதிக்கப் பட்டு உள்ளனர். வெளி நாட்டில் வாழும் தமிழ்ச் சமூகங்களில் வன்முறை என்பதும், தற்கொலை, கொலை என்பதும் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. இது ஒருவகையான பிரச்சனையென்றால், மேலைத் தேசம் தரும் நுகர்பொருள் கலாச்சாரத்தால்

பாதிக்கப் பட்டு தமிழ் விழுமியங்களை மறத்தலும், பொருள் ஈட்டலே வாழ்வின் முக்கிய நோக்கமென்றும் வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களும் மனநோயாளிகளே!

இதற்கிடையில், தாயகத்தில் நடைபெறும் போர்க்காலச் செலவைச் சரி கட்டலும், போரில் அழிவுற்ற குடும்பங்களைப் பேணுதலும், அங்குள்ள உறவினர் மற்றும் நண்பர்களை பொருளாதார ரீதியில் காத்தலும் பெரும் பாரமாக இவர்கள் தலையில் உள்ளது. போரின் வன்முறை கண்டு அல்லது வன்முறைகளில் ஈடுபட்டு இங்கு வந்து வாழும் பல தமிழர்கள் குற்ற உணர்வால் பீடிக்கப் பட்டு வெளித்தெரியா மனநோய்க்கு ஆளாகி உள்ளனர்.

இந்நிலையில், தமிழ் மொழியைப் பேணுதல், அடுத்த தலைமுறையினருக்கு தாய் மொழிக் கல்வி அளித்தல், தமிழ் பண்பாட்டுக் கூறுகளை திருத்தல் இன்றித் தருதல், தமிழ் ஆன்மீகத்தை திரிபு இன்றித் தருதல் போன்றவை புகலிடத் தமிழனின் இன்றையச் சவால்களாகும்.

தாயகம் மீண்டு விடுவதாக பலர் சொல்லி வந்தாலும் மேலைத் தேசத்தின் சுக சௌகர்யங்களும், அறிவியல் முன்னேற்றமும், சட்ட ஒழுங்கும், இது போன்ற இன்னும் பல காரணங்களும் பல தமிழர்களை தமிழ் ஈழம் என்பதொன்று சாத்தியப் படும் போதில் கூட தக்க வைத்துவிடும் என்பதுதான் யதார்த்தம். இது ஒரு குற்ற உணர்வாக உள்ளே தங்கிவிட பல தமிழர்கள் போர்ச் செலவிற்கு என தொடர்ந்து பணம் தருவது ஒரு பரிகாரம் போல் எடுத்துக் கொள்ளப் படுகிறது.

இப்படியான செலவுகள் உண்மையில் அழிவிற்கு தாரை வார்க்கவே பயன் படுகின்றன. முடிவொன்று தெரியாமல் இலங்கைத் தேசம் போர் பொருளாதாரம் என்னும் விஷ வலையில் சிக்கித் தவிக்கிறது. இப்படியான செலவை ஆக்கபூர்வமாக மடை மாற்ற முடியும்.

ஜெர்மன் ஃபிராவன் ஹோபர் கல்வி, தொழில் நுட்ப நிலையங்கள் கணினி, ஊடகங்கள், தொலைபரப்பு இவை கூடும் சங்கமாக "வெளி வலை" (Space Web) என்னும் நகல்நிஜக் கூடங்களை செயல் படுத்த முனைந்துள்ளன (2). இவை நகல் நகரங்கள். தாயகத்தின் அத்தனை அம்சங்களும் கொண்ட நரங்களை நிர்மாணிக்க முடியும் என்கின்றன இவ்வாய்வுகள். தாய்நாடு கிடைக்காமல் அல்லலுறும் தமிழர்கள் இவ்வாராய்ச்சிகளில் ஆர்வம் கொண்டு இயைந்து செயல் பட்டால், புகலிடத்தில் இருந்து கொண்டே தாயகத்தின் சூழலில் வாழ முடியும். தாய் மொழிக் கல்வி, தாயகப் பண்பாடு, தாயகத் தாகம் போன்ற உளவியல் சார்ந்த பிரச்சனைகள் ஆக்கபூர்வமான நிலையில் அனுகப்பட்டு நல்ல பலன் கிடைக்கும் (3).

1) Dryden, G.: Vos, J.: The Learning Revolution. Jalmar Press, Rolling Hill Estates, USA, 1994.
2) Bullinger /Roessler: Virtual Reality as a focal point between new media and telecommunication , Copyright 95, FhG-IAO, Nobelstrassee 12, 70569 Stuttgart, Germany
3) Bullinger/Mueller-Spahn/Roessler: Encouraging Creativity - Support of Mental Processes by
Virtual Experience 12 , In: Virtual Reality World 1996, IDG conferences & seminars

270 empty

# பயனர் பார்வையில் தமிழ்க் கணிமையும், இணையமும் (Tamil Computing and Internet from users point of view)

முனைவர். இராம.கிருட்டிணன்
(தமிழம் தன்னார்வ அமைப்பின் சார்பாக)

---

கட்டுரைச் சுருக்கம்:

உலகின் எந்த மூலையில் இருந்தாலும், உடனுக்குடன் நொடிக்கும் நேரத்தில் பரிமாறிக் கொள்ளும் இணையத்தை தமிழிலும் கொணர்ந்தது பாராட்டத் தக்கது. இந்த இணையம் வளர்வதில் ஒரு நாணயத்திற்கு இரு பக்கம் போல, உள்ளடக்கம் தருவோர் (contents providers), பயன்படுத்துவோர் (users) என இருவரின் பங்களிப்பும் இருக்கிறது. பயனர் பார்வையில் தமிழ்க் கணிமையையும், இணையத்தையும் எப்படி எதிர் கொள்ளுகிறோம், எந்தந்த பயனாக்கங்களை எதிர்பார்க்கிறோம் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

குறீயீட்டுச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, தமிழ் இணையம் - 99 முயற்சி செய்தது இன்னும் செயல்பாட்டிற்கு வராது இருப்பது வருத்தத்திற்கு உரியது. பல்வேறு தமிழ்த் தாளிகைகள், மின்னிதழ்கள், பதிப்பகத்தார், DTP உரிமையாளர்கள், மற்றும் இணைய வழிச் சேவை தருபவர்களும் தத்தமது குறியீடுகளையே இன்னும் பயனாக்குகின்றனர். இப்பொழுது இயங்குவகை எழுத்துருக்கள் வந்து, நிலையை இன்னும் குழப்பிக் கொண்டு இருக்கின்றன. குறியீட்டுச் சிக்கலைத் தீர்க்காவிட்டால், தமிழ்க் கணிமையும் இணையமும் குதிரைக் கொம்பாகவே இருக்கும். இணையம் 2000 இதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாண்மையை (Governance) எளிது படுத்தும் வகையில் குடிமக்களுக்கு அடையாள அட்டைகள் கொடுக்கப் படுவதும், அரசுப் படிவங்களைத் தமிழாக்கி இணையத்தில் உள்ளிடுவதும், இவற்றைப் பயன்படுத்தும் தரவடிக் கிறுவங்களைத் (database programs) தமிழ்ப் படுத்துவதும், தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் கணிமை மாற்றங்கள் வேறு மாவட்டங்களுக்குப் பரவுவதைத் துரிதப்படுத்துவதும், ஓராண்டுகாலமாகச் சொல்லிவரும் குமுகப் பரசு மையங்கள் (Community browsing centres) உடனடியாக ஏற்படுத்துவதும் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்யாமல், தமிழக அரசே இணையாகச் செய்ய வேண்டிய செயல்கள்.

இணையவழி வாணிகத்தில், வணிகத்தில் இருந்து வணிகத்தை (B2B)க் காட்டிலும், வணிகத்தில் இருந்து நுகர்வோர் (B2C) என்னுந் தொடர்பு தமிழிலேயே நடைபெறுவது இன்றியமையாத ஒன்று. இதற்காக, இணையத்தின் வழியே ஒரு பொருளைப் பார்த்து, வாங்குதற்கு ஒப்புதல் அளித்து, தமிழில் கரப்பு மென்பொருள் (cryptic software) மூலம், நுகர்வோர், தன்னையும், தன் கையெழுத்தையும், கடவுச் சொல்லையும் அடையாளங் காட்டி அறிமுகஞ் செய்து, தன் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுத்துக் கொள்ள ஏமஞ் (security) சார்ந்த வகையில் ஆணை பிறப்பிக்க வகையிருக்க வேண்டும். கடையளவில் தமிழ் வழி கொடுக்கப்பட்ட 'வாங்கும் ஆணைகள்' பின் தொகுக்கப் பட்டு, மொத்த விற்பனையாளர் (wholesalers), விளையாக்குவோர் (producers) ஆகியோருக்கு, ஆங்கில வழி, மாநிலம், நாடு, உலகம் எனப் போய்ச் சேர வேண்டும்.

கல்வியை ஒட்டி, தமிழ் வெருத்துவப் பல்கலைக் கழகத்தின் (Tamil Virtual University) தொடக்கம், விரைவு படுத்தப்பட வேண்டும். தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு, நாட்டாரியல், பொருளியல், உளவியல், இசை படிக்க விரும்பும் தமிழ் நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்க்கு இவற்றைக் கற்பிப்பது, தமிழ் நாட்டிற்குள்ளே அஞ்சல் வழிக் கற்போர் இணைய வழிக்கு மாறுவது ஆகியவை இதில் அடங்கும். இணைய வழிக் கல்விக்கு ஆகுஞ் செலவு, நேர்வழிக் கல்விக்கு ஆகுஞ் செலவை விடக் குறைய வேண்டும். இணையப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டங்கள் ஈராண்டுக்கு ஒருமுறை மாற்றப்பட்டு உயர்த்தப்பட வேண்டும். இணையப் பல்கலைக் கழகம் கலை மற்றும் குமுக அறிவியலில் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். பல்கலைக் கழக அளவில் மட்டும் அல்லாது பள்ளி அளவிலும் நாம் கவனம் செலுத்த இணையத்தைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மின்னஞ்சல் புலம் பெயர்ந்த தமிழர்களால், குறிப்பாக ஈழத் தமிழர்களின் சிதறல்களால் பெரிதும் பரவலாக்கப்பட்டு இருக்கிறது. இதில் இன்னுங் கொஞ்சம் ஆழ்ந்து கவனம் செலுத்தினால், ஈழத்துத் தமிழை, மலேசியத் தமிழை, தமிழகத் தமிழை,தென்னாப்பிரிக்கத் தமிழை,மேற்கிந்தியத் தமிழை எல்லாம் கூட்டித் துவைத்து, ஒரு செந்தரத் தமிழை இன்னும் 50 ஆண்டுகளில் ஏற்பட வைக்க முடியும்,

இணைய நூலகங்களைப் பொருத்த வகையில், மதுரைத்திட்டத்தின் ஓரிமை (uniqueness) பாராட்டப்பற்ற வேண்டியது. 50 ஆண்டுகளுக்கு மேலாக சான்றோர்களும், அறி"ர்களும், ஆர்வலர்களும் அறிவியல் தமிழுக்காகச் செய்து வரும் உழைப்புக்கள் சேகரிக்கப்படாது இருக்கின்றன. இந்தக் கலைச் சொற்களை ஒன்று படுத்தி ஒரே இடத்தில் இட்டு, நாளாவட்டத்தில் அவற்றைச் செந்தரப்படுத்த வேண்டும். ஆங்கிலம்-தமிழ், தமிழ்-தமிழ், தமிழ்-ஆங்கிலம் என மூவகை அகரமுதலிகளும் Cologne Online Dictionary போல எடுக்கோட்டு (on-line) நிலையில் வைக்கப்பட வேண்டும். தமிழில் வரும் அறிவியல் ஆக்கங்கள் இந்த நூலகங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

தமிழி, மற்றும் வட்டெழுத்தில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டுக்களைப் படிப்போர் தொகை அருகி வருகிறது. படிக்கப் பட்ட கல்வெட்டுக்கள் 10% எனில், படிக்கப்படா கல்வெட்டுக்கள் 90% இருக்கின்றன.இந்தக் கல்வெட்டுக்களை அந்தந்த எழுத்துருக்களோடே (ஆனால் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட குறியீட்டிலேயே) இணையத்தில் இடப்பட்டால், பின் எழுத்துரு மாற்றிகள் (Font Converters) மூலம் இன்றைய எழுத்துப் பெயர்ப்புக்கு வகை செய்ய முடியும். இதன் மூலம், படிப்புச் சிக்கல் குறையும். தமிழ் நாட்டு வரலாற்றை கி.மு.. 300 - இலிருந்து இன்னுந் தெளிவாக உறுதி செய்ய முடியும்.

தமிழ்க் கணிமையில், இடைமுகங்கள் எல்லாம் தமிழிலேயே இருக்க வேண்டும். இயக்கும் சிட்டங்கள் (Operating Systems) தமிழ்த் தோற்றம் காட்டவேண்டும்.தடவடிக் கிறுவங்கள் தமிழின் அரிச்சுவடிப்படி வரிசைப்படுத்தத் தெரிய வேண்டும். தமிழில் கணிக்கப் பட்டவை ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்தில் கணிக்கப் பட்டவை தமிழுக்கும் மாற்றும் வகையில் இருக்க வேண்டும். ஒளிக்குறிக் காணல் (Optical Character Recognition) மூலம் தமிழ் எழுத்துக்களை அடையாளம் காண வேண்டும். குயவுப் பலகைகளைச் (Key boards) சரி செய்த்து போல் எழுத்து ச் சீர்திருத்தத்தையும் அறி"ர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் அமைவதிலும், பயிற்சி கொடுப்பதிலும் பல இக்கட்டுக்கள் இருக்கும் இந்நாளில், கணிவழி, இணைய வழி கலை, மற்றும் மகிழாட்டங்களைத் (entertainment) தமிழ் வழிப்படுத்து வது இன்றியமையாதது. அடுகும் (audio), விழிவும் (video), பாடமும் இடையாட்டாய்

(interactive) வரும் பொழுது, சிறாரைப் பலவகையாலும் ஊக்கப்படுத்தி நம் கலைகளைக் கற்க வைக்க இயலும்.

முடிப்பாக தமிங்கிலம் ஒருபக்கம் வளர்ந்து கொண்டே, இன்னொரு பக்கம் தமிழ் இணையத்தில் வளர்க்க முயற்சிப்பதின் முரண்பாட்டைச் சொல்லி தமிங்கிலத்தை நிறுத்த வேண்டியதை இக்கட்டுரை முன் வைக்கிறது.

-----

## தொடக்கம்:

உலகத்தைச் சுருக்கி வைத்து, 'தூரம் என்ன தூரம்' என்று சொல்லும் அளவுக்கு, அடுகு (audio), விழிவு (video), மற்றும் குறிகள் (symbols) கொண்ட பல்வேறு மிடையங்களில் (media) இருக்கும் தடவுகளை (data), உலகின் எந்த மூலையில் பரிமாறும் இடங்கள் இருந்தாலும், உடனுக்குடன் நொடிக்கும் நேரத்தில் பரிமாறிக் கொள்வது இணையத்தால் இன்று முடிகிறது. 'இணையமே இல்லாது இருந்த முன்னையப் பத்தாண்டுகளில் உலகம் எப்படி இயங்கி இருக்கும்? ' என்று வினவும் அளவுக்கு, மேலை நாடுகளில் மட்டும் அல்லாது, வளரும் நாடுகளிலும் கூட இந்த வளர்ச்சி பரவியிருக்கிறது. இந்த நல்ல மாற்றத்தைத் தமிழர்க்கும் கிட்டும் வகையில், தமிழ் மொழி ஊடாகக் கொணர்ந்த சில முனைப்பாளர்களுக்கு எம் நன்றி என்றென்றும் உரித்தானது.

இதே போலத் கணிமையின் தாக்கம் ஆங்கில வழி மட்டுமல்லாது தமிழ் வழியும் நடந்து வருவது பெருமைப்படத்தக்கதே. பழம் பெருமை மட்டுமே பேசிக் கொண்டு இராது, புதுத் துறைகளிலும் புகுந்து வருவது தமிழ் மொழியின் நெகிழ்ச்சித் தன்மையையும், இதைப் பேசுவோரின் ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டுகிறது.

இப்பேர்ப்பட்ட தமிழ் இணையமும், கணிமையும் மேலும் வளர்வதில் இருபெரும் வகையினரின் பங்களிப்பு இருக்கிறது. இவர்களில் முதல் வகையினர் மென்பொருள் செய்தும், தளம் அமைத்து ம், அவற்றை நடத்தியும் வரும் உள்ளடக்கம் தருவோர் (Contents Providers). மற்றவர், இந்த உள்ளடக்கங்களைப் பயன்படுத்துவோர் (Contents Users).

ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் போல, இணைய, மற்றும் கணிமைப் பங்களிப்பு இந்த இருவகையினரின் இடையாட்டத்தால் (interaction) ஏற்படும் ஒன்று. ஆகையால், இந்தக் கருத்தரங்கில், உள்ளடக்கங்களைத் தருவோர் தங்களுடையப் பங்களிப்பைப் பற்றி ஒரு பக்கம் சொல்லும் போது, மறு பக்கம் பயனர் (user) என்ற முறையில், உள்ளடக்கத்தைப் பயன்படுத்தும் நாங்கள் தமிழ்க் கணிமையையும், இணையத்தையும் எப்படிப் பார்க்கிறோம், எதிர் கொள்ளுகிறோம் என்பதைப் பன்முகப் பார்வையால் இங்கே எடுத்துரைக்க விழைகிறேன்.

## குறியீட்டுச் சிக்கல்:

சென்னையில் நடந்த தமிழ் இணையம் - 99 என்ற முந்தையக் கருத்தரங்கில் இந்தக் குறியீட்டுச் சிக்கல் தீர்ந்தது என்றே நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால், அது இன்னும் தீர்ந்த பாடில்லை என்பது போல் இப்பொழுது தோற்றுகிறது. தமிழகத்திற்கு வெளியே புலம் பெயர்ந்த தமிழர்களால் உருவான TSCII குறீயீடு பலராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுப் பரவி வந்த நிலையில், சென்ற கருத்தரங்கில் TAM, TAB என்ற குறியீடுகள் பரிந்துரைக்கப் பட்டு, தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப் பட்டு அதற்கான அரசாணையும் வந்தது.

சரி, 20, 25 எழுத்துருக்கள் இருந்த இடத்தில் மூன்று எழுத்துருக்கள் (fonts) மட்டுமே தங்கும்; நாளடைவில் சரியாகி ஒன்றாகும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அது பொய்யாய், பழங்கதையாய் மக்கிப் போனது. பல்வேறு தாளிகைகளும், மின்னிதழ்களும், பதிப்பகத்தார்களும், DTP உரிமையாளர்களும், மற்றும் இணைய வழிச் சேவையர்களும் இன்னும்கூடத் தங்கள் பயனேற்றங்களிலும், வலைத்தளங்களிலும் தாங்கள் ஏற்கனவே உருவாக்கிய வெவ்வேறு குறியீட்டின் அடிப்படையிலேயே எழுத்துருக்களை பயனாக்கி வருகின்றனர். மிக அண்மையில் கூடப் புதுக் குறியீடுகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இதற்கிடையில் "நீங்கள் எங்களைப் படித்தால் போதும்; வேறு எதற்கும் பயனாக்க வேண்டாம்" என்று சொல்லுமாப் போல இப்பொழுது இயங்குவகை எழுத்துருக்கள் (dynamic fonts) புதிதாக வெளியாகி வருகின்றன.

இப்படி வீட்டிற்கு வீடு வாசற்படி என்பது போல் ஒவ்வொருவரும் அவரவர்க்கு என்று குறியீடு உருவாக்குவது, அவர்களின் பெருமிதத்தாலா, அவர்களுடைய அகப் (ego) போக்கினாலா, அன்றி மற்றோருடன் சேராது தான் மட்டும் விடிவு காண எண்ணுகிற தமிழ் நண்டுத் தனமா என்று சொல்லத் தெரியவில்லை. தமிழ் இணையக் கவி"ர் இரமணிதரன் ஒரு மின்னஞ்சலில் சொன்னது போல 'நாளொரு சைட்டும் பொழுதொரு *பாண்டும்' ஆகத் தமிழ் வளர்ந்து வருவதைக் கண்டு வருத்தப் படாது இருக்கமுடியவில்லை. முடிவில் விவிலிய நூலில் வரும் 'Tower of Babel' கதை போல ஒருவருக்கொருவர் புரியாமல் 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்பதை இணையத்தில் உருவாக்கி விடுவோமோ என்று மனம் பேதுறுகிறது.

இதே பொழுது, தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் மாண்புமிகு திரு. அச்சுத மேனன் அவர்கள் முதலமைச்சராய் இருந்த போது அரசு முயற்சியால் நடந்த மலையாள எழுத்துச் சீர்திருத்தம் "ாபகத்திற்கு வருகிறது. கேரளத்தில் அப்போது இருந்த மொழி அறி"ர்கள், தாளிகையாளர்கள், தகவல் துறையினர், பதிப்பகத்தார் , இன்னும் மொழியோடு தொடர்புடைய பெரியவர்கள், ஆர்வலர்கள் யாரெல்லாம் உண்டோ, அவர்களை எல்லாம் ஒரு பெரிய கூட்டமாய்க் கூட்டி, அம்மாநாட்டின் முடிவில் ஒரு பரிந்துரைக்கு வந்து, பின் அதைச் செயலாற்ற குறிப்பிட்ட காலம் கொடுத்து அதை நடைமுறைப்படுத்திய சீர்மையை நினைக்கின்ற போது, நம்மால் இப்போது ஏன் இந்தக் குறியீட்டை நடைமுறைப் படுத்த இயலாது என்று தோன்றுகிறது.

ஏன், தமிழகத்திலேயே பெரியார்வழி எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வரவில்லையா? இப்பொழுது என்ன, எழுத்தையா மாற்றச் சொல்லுகிறோம்? குறியீட்டைத் தானே செந்தரப்படுத்தச் சொல்லுகிறோம்? இதை ஏன் வலைத் தள உரிமையாளர்கள் எல்லோருமே வழமைக்குக் கொண்டு வரக் கூடாது? இதில் அவர்களுக்கு என்ன இழப்பு? ஏற்கனவே அவர்கள் தங்களுடைய சொந்த எழுத்துருவில் உருவாக்கி தங்களின் வலைப் புலக் கருவூலத்தில் ஏற்றிவிட்டதை இப்பொழுது செந்தர எழுத்துருவிற்கு மாற்றி விட்டால் மற்றவர் பழையவற்றைப் படிக்க முடியாது என்று நினைக்கிறார்களா? ஒரு எழுத்துரு மாற்றும் (font converting) மென்பொருளை உருவாக்கி அவர்களின் வலைப் புலத்தில் இருக்கும் பழைய தடவுகளை புதிதாகக் கொண்டு வந்து இந்தச் சிக்கலைத் தீர்த்து விடலாமே? "ஏன் செய்ய மறுக்கிறார்கள்?" என்று புரியவில்லை. அதே பொழுது,"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பயனொன்றில்லை" என்ற வாக்கையும் எண்ணிப் பார்க்கிறோம்.

இந்தச் சிக்கலை இணையம் -2000 த்தில் பல்வேறு நாட்டின் முகவர்களாகக் கூடியுள்ளவர்கள் ஒருங்கு சேர்ந்து உரையாடித் தருக்கித்து, ஒரு தீர்மான முடிவைக் கொடுக்கவேண்டும். தமிழர்கள் வெறும் பேச்சாளர்கள் என்று ஆகிவிடக் கூடதல்லவா?

"இதை ஏன் செய்ய வேண்டும், 16 பிட்டுள்ள unicode வந்து விடாதா?' என்பவர்களுக்கு, தமிழம் என்ற ஆர்வலர் அமைப்பைச் சார்ந்த எங்கள் முன்னீடு: 7, 8, 16 பிட்டுகள் (bits) மூன்றிலுமே நமக்குச் செந்தரமான குறியீடு வேண்டும் எனினும், இப்பொழுது, 8 - பிட்டுக் குறியீட்டைச் செந்தரப் படுத்துவோம். 7, 16 பிட்டுகளைப் பின்னே கவனிப்போம்.

அடுத்தது, தமிழ் இணையம், மற்றும் கணிமையின் பயன்பாடுகளில் சிலவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு, நம்முடைய செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்று பின் வரும் பத்திகளில் பார்க்கலாம்.

## இணையவழி அரசாண்மை (e-Governance):

அரசாண்மையை எப்படி எளிதாக்கலாம் என்ற இந்தப் புதிரியை (problem) விடுவிக்கப் பலரும் காலங் காலமாய் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், எங்க்ள் எதிர்பார்ப்பில், வாராது போல் வந்த மாமணியான இணையத்தால் இந்தப் புதிரியை விடுவிக்க முடியும் என்றே கொஞ்சம் அழுத்தமாகவே கூறத் தோன்றுகிறது.

விரிவாகச் சொன்னால்,

1. அரசின் பல்வேறு நிலைகளில் (குறிப்பாக அமைச்சகங்கள், அரசுத்துறைகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், ஆகியவற்றில்) குடிமக்கள் வரி செலுத்துவது,
2. மின்சாரம், நீர் போன்றவற்றை வாரியங்கள் மூலம் வழங்கும் அரசுச் சேவைகளுக்குக் கட்டணம் செலுத்துவது,
3. குடிமக்களிடம் நடைபெறும் பரிமாற்றங்களுக்கு ஒப்புதல்கள் பெறுவது,
4. அரசின் நடைமுறை விளக்கங்கள், கொள்கை வெளியீடுகள், சட்டதிட்டங்கள், அரசாணைகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளுவது,
5. சொத்துவிவரங்களைப் பதிவு செய்து, பட்டாப் பெறுவது,
6. பல்வேறு சான்றிதழ்களை அரசிடம் இருந்து பெறுவது,
7. "நான் தான் நான்" என்று ஒரு குடிமகன் சட்டமுறையில் தன்னை நிலை நாட்டுவது (ஒரு குடிமகனுக்கு அரசைப் பொறுத்த காரியங்களில் இதுவொன்றே மிகவும் சிக்கலானது.)

என எத்தனையோ செயல்களை செய்ய, இணையம் எளிமையான வழிகளைக் காட்ட முடியும். இதன் மூலம், வளரும் நாடுகளில் அரசாண்மை என்பது எளிதாகும். குறிப்பாக மக்கள் தொகை பெருகிய நாடுகளில் இது மிகப் பரந்த பலனைக் கொடுக்கும்.

இதற்குத் தேவையானவை:

1. அமெரிக்க ஒன்றிய நாடுகளில் இருக்கும் குகுகாய ஏம அட்டை (Social Security Card) போல ஓரொரு குடிமகனுக்கும் தர வேண்டிய குடிமக்கள் அடையாள அட்டை. அல்லது குறியீடு (Citizens Identity Card or Code - CIC).
2. நூற்றுக்கணக்கான அரசுப் படிவங்களைத் (forms) தமிழ்ப் படுத்துதல்.
3. பல்வேறு வகைத் தடவுகளை வகைப்படி ஒழுங்குபடுத்தும் திறனுள்ள தடவடிக் கிறுவங்களைத் (database programs) தமிழ்ப்படுத்துதல்.
4. "அரசாங்கம் என்பது நம்மைவிட்டு எங்கோ இருப்பது; நம் குறைகளுக்குச் செவிசாய்க்காது " என்று எண்ணிக் கொண்டு, அரசைத் தேடி, எங்கோ இருக்கின்ற தலைமை அலுவத்திற்கோ (அலுவம் - Office, அலுவலகம் என்ற நீண்ட சொல் இங்கு

தேவையில்லை), மாவட்டாட்சியர் அலுவத்திற்கோ, வட்டாட்சியர் அலுவத்திற்கோ மக்கள் நடையாய் நடக்க வேண்டியதற்குப் பதிலாக, இணையத்தின் மூலமே அணுக முடியும் என்ற நிலை ஏற்படுதல்.. (இந்தப் புரட்சி, தமிழகத்தில் திருவாரூர் மாவட்டத்தில் நடப்பது போல, மற்ற எல்லா மாவட்டங்களிலும் வெகு விரைவில் பரவ வேண்டும்.)

5. இந்தப் பரவலின் சிறப்பை வெகுவாக உணரும் வகையில், குமுனியப் பரசு மையங்கள் (community browsing centres) ஏற்படுத்தல்.

மேலே கூறிய மாற்றங்கள் எல்லாமே ஒன்றன் பின் ஒன்றாய் நடக்காது, இணையாகவே (parallelly) நடக்க வேண்டியவைதான். இத்தகைய மாற்றங்களினால், அரசின் வேலை துரிதப் படும்; மக்களும், தங்கள் கோரிக்கை எங்கே எந்த மட்டத்தில் இருக்கிறது என்று வால் போலப் பின் துரத்திக் கொண்டே போக வேண்டாம். நாளடைவில், ஆங்காங்கே கோரிக்கைகளை ஒரு மேசையில் இருந்து இன்னொரு மேசைக்கு நகர்த்த நடக்கும் (அளவில் சிறிய ஆனால் பரவலாக உள்ள) ஊழல்கள் குறையும்; பல இடைத் தரகர்கள் மறைவார்கள்; அரசு மக்களுக்கு அருகில் வந்து விடும். பொதுமக்கள் பெரிதும் பயனடைவதால், அரசு என்பது மக்களோடு இணையும். மொத்தத்தில் வாழ்க்கைத்தரம் கூட உயர வாய்ப்பு உண்டு.

## இணைய வழி வாணிகம் (e-Commerce):

வாணிகம் பற்றிய இணையத் தொடர்பு இரண்டு வகைப் படும். சரியாகச் சொன்னால், வணிகத்தில் இருந்து வணிகம் (B2B), வணிகத்தில் இருந்து நுகர்வோர் (B2C) ஆகிய இரண்டையுமே நாம் பார்க்க வேண்டும்.

வணிகத்தில் இருந்து வணிகம் என்பது இடம் விட்டு இடமாகவும், மண்டலம் விட்டு மண்டலமாகவும், மாநிலம் விட்டு மாநிலமாகவும், நாடு விட்டு நாடாகவும் நடை பெறுவதால் பெரும்பாலும் ஆங்கிலம் வழி நடக்கக் கூடும். அதற்கு மாறாக, வணிகத்தில் இருந்து நுகர்வோர் (B2C) என்று வரும் போது தான், தமிழ் வழிச் சொல்ல வேண்டிய தேவையை உணர முடியும் இதையும் ஆங்கில வழியே சொல்லிக் கொண்டிருந்தால், வணிகமும் வளராது, பொருளாதாரமும் வளராது. (ஏனெனில் ஆங்கிலம் அறிந்தோர் 3 அல்லது 4 விழுக்காடே தமிழ்நாட்டில் இருக்கின்றனர்.)

ஒரு பல்பொருள் அங்காடியில் பயற்றம் பருப்போ, பொன்னி அரிசியோ, மேல்துண்டோ, கால்சாராயோ (pants), குப்பாயமோ (coat), புதையடியோ (boots), குளிர்ப் பெட்டகமோ (refrigerator), துவைக்கும் எந்திரமோ (washing machine) எதுவானாலும் இணையத்திலேயே பார்த்து, வேண்டியதை அறிந்து, இணையத்தின் வழியே வாங்குவதற்கு ஒப்புதல் அளித்து, கரப்பு மென்பொருள் (cryptic software) மூலம் தன்னையும் தன் கையெழுத்தையும் , கடவுச் சொல்லையும் (pass word) அறிமுகஞ் செய்து, தன் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுத்துக் கொள்ள ஏமஞ் (safety) சேர்ந்த வகையில் ஆணை பிறப்பித்து ஒரு பொருளை வாங்க வகையிருக்க வேண்டும்.

இதைச் செய்ய, புதிய மென்பொருள் தேவையில்லை. ஏற்கனவே ஆங்கிலத்தில் உள்ள B2C மென் பொருள்களைப் பயன் படுத்தலாம். இந்த மென்பொருள்களுக்கு, தமிழ் இடைமுகம் (interface) காட்டும் வகையில் முன்தோற்றத்தை (frontal appearance) அளிக்க வேண்டியது மட்டுமே நாம் செய்ய வேண்டியது ஆகும்.

மொத்தத்தில் ஒரு பொருள் வாங்க வேண்டுமெனில், ஆங்கில அறிவு இல்லாத ஒரு நாட்டுப் புறத்துப் பெண்ணும்கூட, எளிய பயிற்சிக்குப் பின், இணைய வழியாகவே அதைச் செய்யும்

வகை வேண்டும். கடையளவில் (shop level) தமிழ் வழி கொடுக்கப் பட்ட 'வாங்கும் ஆணைகள் (purchase orders)' பின் தொகுக்கப்பட்டு, மொத்த விற்பனையாளர் (wholesalers), விளைவாக்குவோர் (producers) ஆகியோருக்கு, ஆங்கில வழி மாநிலம், நாடு, உலகம் எனப் போய்ச் சேர வேண்டும்.

## இணைய வழிக் கல்வி (e-Education):

சென்ற கருத்தரங்கில் தமிழ் வெருத்துவ (இணைய)ப் பல்கலைக் கழகம் (Tamil Virtual Internet University) பற்றிய முயற்சிகள் எடுக்கப் பட்டன. இதன் தொடக்கம் விரைவு படுத்தப்பட வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம் தொடர்பாக மேலும் செய்ய வேண்டியவை:

1. தமிழ் தெரியாத ஆனால் தமிழ் படிக்க விரும்பும் வெளிநாட்டுத் தமிழர்க்குக் கற்றுக் கொடுத்தல்.
2. இப்பொழுது தமிழகப் பல்கலைக் கழகங்களில் அஞ்சல் வழிக் கல்வியில் ஈடுபட்டுள்ளவர்கள் இணைய வழிக் கல்விக்கு முற்றிலும் மாற வகை செய்தல். (அஞ்சல் வழிக் கல்வியைக் காட்டிலும் இணைய வழிக் கல்வி இருவழி இடையாட்டிற்கு இணக்கமுள்ளதால் அஞ்சல் வழிக் கல்வி கூடிய விரைவில் மறைவதே நல்லது.)
3. இணைய வழிக் கல்வியை, எங்கும் இருக்கின்ற கல்லூரி, பல்கலைக் கழகங்களில் இருந்து பெறும் நேர்வழிக் கல்விக்கு ஆகுஞ் செலவை விடக் குறைந்த செலவிலேயே கிடைக்க வழி செய்தல். (இல்லையெனில், இணையப் பல்கலைக் கழகத்தில் ஏன் சேர வேண்டும் என்று தோன்றிவிடும்.)
4. இந்த இணையப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டங்கள், மற்ற பல்கலைக் கழகங்கள் போல் ஐதரலிக் காலத்தவையாக அல்லாது, ஈராண்டுகளுக்கு ஒருமுறையாவது மாற்றப் பட்டு உயர்த்தப் படுதல்.
5. இந்த இணையப் பல்கலைக் கழகம் மொழி, பண்பாடு, வரலாறு, நாட்டாரியல், பொருளியல், உளவியல், இசை, கலை மற்றும் குமுக அறிவியலில் ஆழ்ந்த கவனம் செலுத்துதல். [பூதவியல் (Physics), வேதியல் (Chemistry), விலங்கியல் (Zoology), புதலியல் (Botony) போன்ற இயற்கை அறிவியல், பொறியியல் (Engineering), மருத்து வயியல் (Medicine) போன்றவை வேண்டாம் என்று சொல்லவில்லை. பதிலாக, இவற்றைக் காட்டிலும் மேலே சொன்னவைகளில் அழுத்தம் கொடுக்கலாம் என்றே சொல்லுகிறோம்.]
6. மரபு சார்ந்த படிப்புப் (traditional subjects) படித்தவர்களுக்கு இன்று வேலை வாய்ப்புக்கள் அரிதாகவே இருக்கின்றன. தொழில் சார்ந்த படிப்புப் (professional subjects) படித்தவர்களுக்கே முதன்மை இருக்கிறது. இதை ஓரளவாவது சரி செய்யும் வகையில் இணையப் பல்கலைக் கழகம், மென்பாடங்களை, வன்பாடங்களோடு விரவிக் கலந்து புதிய பாடத் திட்டங்களை, வேலைவாய்ப்பைப் பெறும் வகையில் தர வேண்டும்.

கல்வி என்றவுடன், பல்கலைக் கழகங்கள் மட்டுமே நினைவுக்கு வராமல், பள்ளிகளும் நினைவுக்கு வரவேண்டும். பல நாட்டுப்புறப் பள்ளிகளும், மற்றும் வசதியில்லாத நகர்ப்புற பள்ளிகளும் படிப்பிற்கான ஊற்றுக்கால்கள் (Resources) இல்லாதனவாய் இருக்கின்றன. மடியுழைப் பள்ளிகளில் (matriculation schools) தமிழ் பாட மொழியாவதில் ஏற்பட்ட அண்மைத் தடங்கலைச் சரிசெய்வது போக, ஏற்கனவே தமிழ் வழிப் பள்ளிக் கூடங்களில் பாடத்திட்டங்களில் இருக்கும் குறைகளையும் கூட கல்வியாளர்கள் சரி செய்ய வேண்டும். இதற்கும் இணையத்தில் உள்ள ஆர்வலர்கள் உதவி செய்ய முடியும்.

குழந்தைகளுக்கான கல்வியாளர்கள் மென்பொருள் எழுதுவோருடன் கூட்டுச் சேர்ந்து இந்தக் குறையை நிறைவு செய்ய வேண்டும். குழந்தை/சிறார் கல்வியில் ஒரு புரட்சியே செய்ய முடியும்.

(அண்மையில் சென்னைப் பெருநகரப் பள்ளிகளில் ஆட்டமும் பாட்டும் கலந்த விளையாட்டு முறைப் படிப்பு பெரிய அளவில், வரும் கல்வியாண்டில் பயன்படுத்த இருக்கிறது. திட்டங்களுக்குச் செலவு பண்ண பணம் அரிதாகக் கிடைக்கும் இந்நாளில், விளையாட்டு முறைப் படிப்பை இணைய வழிக் கல்வியோடு இணைக்க முடிந்தால் இன்னும் நலம் பயக்கும்; செலவும் கூடாது)

நமக்கு வருத்தமாக இருந்தாலும், தமிழகப் படிப்பில் உள்ள இன்றைய அவல நிலையை நாம் எல்லோரும் உணரத்தான் வேண்டும். தமிழ் மாணவர்கள் பலரும், எந்த மொழியில் படித்தாலும், நம் நிலத்து மரங்கள், பறவைகள், விலங்குகள் எப்படி இருக்கும், அதன் வரலாறுகள், இயற்கைகள் என்ன என்று தெரியாது இருக்கின்றனர்.

* முருக்க மரம் என்று ஒன்று உண்டு, அது முருங்கை மரத்தைவிட மாறுபட்டது; செந்நிறமான பூக்களை "துதரும்" என்று எத்தனை பேருக்குத் தெரியும்?
* கடம்ப மரம் எத்தனை வகையது என்று பள்ளி மாணவனுக்குத் தெரியுமா?
* அன்றிற் பறவை எப்படி இருக்கும்?
* கொக்கிற்கும், நாரைக்கும் வேறுபாடு என்ன?
* குருகு என்றால் என்ன?
* தூக்கணாங் குருவியை அடையாளங் காட்ட முடியுமா?
* கீசுகீசென்று குருவிச் சாத்தான் கத்தியதை ஆண்டாள் பாடினாளே, நம்மில் எத்தனை பேருக்குக் குருவிச் சாத்தானைத் தெரியும்?

இப்படிக் கேள்விகளை விடுத்துக் கொண்டே போகலாம். இவற்றை எல்லாம் விளக்குகின்ற ஆசிரியர்களும் மிகக்குறைவு. தமிழக, ஈழ இயற்கை அறிவு கொண்ட பழைய ஆசிரியர்கள் பெரிதும் மறைந்து விட்டனர். வெறுமே மதிப்பெண்களுக்காக, 'இரண்டு மார்க்குக் கேள்விகள், ஐந்து மார்க்குக் கேள்விகள், பத்து மார்க்குக் கேள்விகள்' என்று இனம் பிரித்து, உரைநூல் படித்து ஒப்பித்து, "அசோகர் சத்திரங் கட்டினார்; சாவடிகட்டினார்; சாலையின் இருமருங்கும் மரங்கள் நட்டார்"என்று மனப்பாடம் செய்வதற்கு மட்டுமே இன்றையக் கல்வி இருக்கிறது.

ஆங்கில வழிப் படிப்பினரின் நிலையோ இன்னுங் கொடுமை. அவர்களுக்குப் 'பையினும் செடாரும்' என ஊசியிலை மரங்கள் பற்றி மனப்பாடமாகத் தெரியும். ஆனால் தாம் வாழும் நாட்டின் இயற்கை தெரியாது. "கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ?" என்றான் பாரதி. இந்தப் பள்ளிகளை நடத்துவோரும், இந்த மாணவரின் பெற்றோரும் நீதிமன்றத்தில் வெற்றி கிடைத்து விட்டது என்று குருடராய் நின்றுச் சித்திரம் வாங்கத் துடிக்கிறார்கள். இவர்களுக்கு "நிலா ஓடி வர வேண்டாம்; கருப்பாடு ஓடி வந்தால் போதும். அம்மா கைவீச வேண்டாம். மினுமினுக்கிற விண்மீன் எப்படி இருக்கிறது என்று தெரிந்தால் போதும்", வெளிநாட்டுக் காரன் வேலையைத் தூக்கிக் கொடுத்துவிடுவான்.

மொத்தத்தில் இன்றைய தமிழ் மாணவர்கள் நீரில் இருந்து எடுத்துப் போட்ட மீன் போல உயிரிழந்து கிடக்கிறார்கள். பண்பாடு, தமிழ்நில இயற்கை (பாலை என்றால் சவுதி "ரேபியாவையும் இராசத்தானத்தையும் நினைத்துக் கொண்டிருக்கிறான்; தமிழில் பாலை நிலம் என்றால் என்ன என்று அவனுக்குத் தெரியாது), பழக்க வழக்கம் எல்லாவற்றையும் தெரியாமல் இருப்பதாலேதான் கவர்ச்சியான பொருள்களில் உணர்ச்சிவயப்பட்டு இளையர்கள் நிலைதிரிந்து போகிறார்கள். இதைச் சில பெற்றோர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் கல்வியில் மாற்றங்களை வேகமாகக் காண வேண்டுமானால், இணையத்தின் வழி பல உள்ளடக்கங்களைக் கல்விக்கெனக் கொண்டு சேர்க்க வேண்டும். இதைப் பற்றியே

இந்தக் கட்டுரை முழுதும் சொல்லிவிடலாம். இருப்பினும் ஒரு கோடி காட்ட வேண்டும் என்றே மேலே உள்ளதைக் கூறினேன்.

## மின்னஞ்சல் (e-Mail):

ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்களில் உற்றாரும், உறவினரும், நண்பர்களும் ஊராரும் வெவ்வேறு நாடுகளில் குடியேற நேர்ந்து, ஒருவருக்கொருவர் உடனடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால் இந்தத் தமிழ் வழி மின்னஞ்சல் மிகப் பெரிய அளவில் பெருகியது. இந்த உண்மையைத் தமிழர்கள் பலரும் அழுத்திச் சொல்வது இல்லை.

இந்தப் புலம் பெயர்ந்தவர்களின் கூட்டம், பின் பொருளாதாரத்திற்கெனவும் மென்பொருள் செய்ய வாய்ப்பு நாடியும் வெளிப் புறந்த தமிழகத் தமிழர்களால் இன்னும் கூடியது. இத்தகைய தமிழர்களுக்காகவே, மின்னஞ்சல் குழாம்கள் ஏற்பட்டன. உலகத்தில் உள்ள எல்லாப் புலனங்களுக்குமே, தமிழில் அஞ்சல் குழுக்கள் ஏற்பட்டுள்ளனவோ என்று சொல்லும் வகையில் இன்று ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரோடி வளர்ந்துள்ளன. தமிழ் இணையம் (tamil.net), அகத்தியர் (agathiyar@egroups.com), எனப் பல குழுக்கள், வேகத்தோடும் ஆழத்தோடும் இயங்கி வருகின்றன. இத்தகைய தன்னார்வக் குழுக்களால் TSCII எழுத்துருவும், (யாழ்ப்பாண நூலகம் அழிந்தது போல் நெருப்புக்கு இரையாகாமலோ, தமிழகத்தில் இருக்கும் பல தொன்று தொட்ட நூலகங்கள் பண உதவி இல்லாத காரணத்தால் செல்லரித்துப் போல் அல்லாமலோ இருக்கும் வகையில்) தமிழ் இலக்கியங்களை மின்னேற்றி வைத்த மதுரைத் திட்டமும் இந்தக் குழுக்களால் ஏற்பட்டவை தான். இவையெல்லாம் மின்னஞ்சல்களின் தூண்டுதலால் ஏற்பட்ட முன்னேற்றங்கள். இன்னுஞ் சிலவற்றை நான் சொல்ல வேண்டும்.

* தமிழைப் பள்ளியிறுதி வரை மட்டுமே பயன்படுத்திப் பின் பயனாக்க மறந்த புலம் பெயர்ந்த தமிழர்கள் பலருக்கு, தமிழ் எழுத வேண்டும் என்ற உணர்வை ஊட்டியதும் இந்த மின்னஞ்சல்களே.
* தமிழே தெரியாத தென்னாப்பிரிக்க, மொரிசியசு, பிசி, மற்றும் மேற்கிந்தியத் தமிழர்களுக்கு, தமிழின் பால் ஆர்வத்தை எழுப்பியதும் இந்த தமிழும் ஆங்கிலமும் நடைமொழிகளாகக் கொண்ட குழு மின்னஞ்சல்களே.
* உலகெங்கும் உள்ள தமிழரை இணைப்பதும் இந்த மின்னஞ்சல்களே.
* தமிழுக்குச் செந்தரம் என்று ஒன்று உண்டா என்று யாரோ ஒருவர் கேட்டார். அது மது ரைத்தமிழ், நெல்லைத் தமிழ், திருச்சித் தமிழ், யாழ்ப்பாணத்தமிழ் என்றெல்லாம் சொன்ன காலம் மலையேறிவிட்டது. இன்று ஈழத்துத்தமிழை, மலேசியத்தமிழை, தமிழகத் தமிழை, தென்னாப்பிரிக்கத்தமிழை, மேற்கிந்தியத் தமிழை எல்லாம் கூட்டித் துவைத்து ஒரு பொதுவான தமிழ் உருவாகி கொண்டிருக்கிறது. இந்த உருவாக்கம் செழித்து, ஒருவேளை 50 ஆண்டுகள் இன்னும் கழிந்தால் செந்தரத் தமிழ் ஏற்படலாம். அதற்கும் இந்த தமிழ் மின்னஞ்சல்களே காலோச்சுகின்றன.

## இணைய வழி நூலகங்கள் (e-Library):

மேலே மதுரைத்திட்டம் பற்றிக் கூறினேன். இணைய நூலகங்களைப் பொருத்த வகையில், மது ரைத்திட்டத்தின் ஓரிமை (uniqueness) பாராட்டப்பட வேண்டியது. இந்தத்திட்டத்தில் சங்க இலக்கியங்களும், இடைக்கால இலக்கியங்களும், புதிய இலக்கியங்களும் TSCII எழுத்து ருவில் உள்ளிடப் பெற்று எந்நேரமும் எடுக்கோட்டு (on-line) நிலையில் உள்ளன. யார் வேண்டுமானாலும் இருந்த இடத்தில் இருந்து வேறு நூலகம் தேடாது அவற்றைப் படிக்கவோ, மேற்கோள் காட்டவோ முடியும்,

இந்தத் திட்டத்தின் வளர்ச்சி கண்டு நெஞ்சு நிறைகிறது. யாழ்ப்பாண நூலகம் அழிந்து போனதைச் சரி செய்துவிடலாம் என்று தோன்றுகிறது. அதே பொழுது, இன்னுஞ் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று எண்ணி அவற்றை முன்னிடுகிறோம்.

1. தமிழில் அறிவியல் என்பதை வேவ்வேறு காலங்களில் (50 ஆண்டுகளுக்கு மேலாக) சான்றோர்களும் அறி"ர்களும் ஆர்வலர்களும் ( பல்வேறு தமிழ் நாட்டுக் கல்லூரிகள், தமிழ் மன்றங்கள், தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள், ஈழத்தில் இருந்த நிறுவனங்கள், ஆர்வலர் எனப் பலர்) செய்து வருகின்றனர். ஆனாலும் இந்த உழைப்புகள் சேகரிக்கப் படாமல், விழலுக்கு இறைத்த நீராய் ஆகிவிட்டன. இந்தக் கலைச் சொற்களை ஒன்று படுத்தி ஒரே இடத்தில் இட்டு நாளாவட்டத்தில் அவற்றைச் செந்தரப் படுத்தி பாரதி, பாரதிதாசன் கனவுகளை நனவுகளாக்க வேண்டும்.

2. தமிழில் சிதம்பரநாதரால் வெளிவந்த சென்னைப் பல்கலைக் கழக அகராதிக்குப் பின், அகராதிப் பணி தடைப்பட்டுவிட்டது. கிரியாவின் தற்கால அகரமுதலி ஒரு நல்ல முயற்சி. பாவாணரின் சொற்பிறப்பியல் அகர முதலி அவர் மறைவிற்குப் பின் மிக மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட மு.சண்முகம்பிள்ளையின் தமிழ்-தமிழ் அகரமுதலி (1985) ஓரளவுக்குப் பயன்படுகிறது. இருப்பினும் புதிய நூற்றாண்டிற்கு உகந்த ஆங்கிலம்-தமிழ் அகரமுதலிகள், தமிழ்-தமிழ் அகரமுதலிகள், தமிழ்-ஆங்கிலம் அகரமுதலிகள் எனப் பலவும் செம்மையான முறையில் பதிப்பிக்கப் பட வேண்டும். இவை (ஆங்கில எழுத்துப் பெயர்ப்போடு இருக்கும்) Cologne தமிழ்-ஆங்கிலம் அகரமுதலி போல எடுக்கோட்டு நிலையில் வைக்கப் பட வேண்டும். தமிழ் அறிவு மேலோட்டமாக உள்ளவர் கூட, இந்த அகர முதலிகளைப் பார்த்துப் பொருள் புரிந்து சொற்றொடர் அமைக்கும் நிலைக்கு வர வேண்டும்.

3. தமிழ் நாடு, ஈழம், மலேசியா, இந்தோனேசியா போன்றவற்றில் நம் வரலாற்றுச் செய்திகள் கல்வெட்டுக்களாய்ச் சிதறிக் கிடக்கின்றன. இவை தமிழி மற்றும் வட்டெழுத்துக்களில் இருக்கின்றன. இவற்றைப் படிப்போர் அருகி வருகின்றனர். . படிக்கப் பட்ட கல்வெட்டுக்கள் 10% எனில், படிக்கப்படாத கல்வெட்டுக்கள் 90% இருக்கின்றன. எனவே அடிப்படையில் தமிழாக இருக்கும் இந்தக் கல்வெட்டுகள் வெளித்தோற்றும் எழுத்துருக்களில் மட்டுமே பழையதாக இருப்பதால், நாம் ஒப்புக் கொண்ட குறியீட்டுப் பட்டியலை வைத்தே இவற்றை கணினியில் உள்ளிட்டு, பின் 'எழுத்துரு மாற்றி' மூலம் இக்கால எழுத்துக்களுக்கு மாற்ற வேண்டும். இதன் மூலம் சென்னை எழுமூர் ஆவணக் காப்பகத்திலும், தமிழகக் கோயில்களிலும், மற்ற நாடுகளில் இடிபாடுகளுக்கிடையிலும் கிடக்கும் அளவற்ற கல்வெட்டுக்களைப் படிக்க முடியும். தமிழ் நாட்டு வரலாற்றை கி.மு.. 300 - இலிருந்து இன்னுந் தெளிவாக உறுதி செய்து, செப்பமாக எழுத முடியும்.

தமிழ்க் கணிமை:

தமிழ்க் கணிமை என்றவுடன், ஏதோ எல்லாமே தமிழில் நடை பெறுவதாக நாம் எண்ணுவதில்லை. கணிமையில் நாம் எதிர்பார்ர்ப்பவை மிகச் சில:

1. பயனாள்பவனுக்கு, நட்பான முறையில், முனையத்தில் (terminal) தெரிபவை (ஆணைகள், விளக்கங்கள், உதவிகள் என) எல்லாமே தமிழில் இருக்க வேண்டும்;
2. மேலே உள்ளவைக்கான இடைமுகங்கள் எல்லாம் தமிழில் இருக்க வேண்டும்.

3. Windows, Linux போன்ற இயக்கும் சிட்டங்கள் (operating systems) தமிழ்த் தோற்றம் காட்ட வேண்டும்.
4. Access, Oracle போன்ற தடவடிக் கிறுவங்களுக்குத் (database programs) தமிழ் அரிச்சுவடியின் படி வரிசைப் படுத்தத் தெரிய வேண்டும்.
5. தேவைப் பட்டால் தமிழில் கணிக்கப் பட்டவை ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்தில் கணிக்கப் பட்டவை தமிழுக்கும் மாற்றும் வகையில் மென்பொருட்கள் அமைய வேண்டும்.
6. ஒளிக்குறிக் காணலின் (Optical Character Recognition) மூலம் தமிழ் எழுத்துக்களை அடையாளம் காண வேண்டும். இந்த நுட்பம் வாய்க்குமானால், எண்ணற்ற பொத்தகங்கள், குறிப்புக்கள், தடவுகள் போன்றவற்றை ஆட்திறன் (manpower) கொண்டு உள்ளீடு செய்யத் தேவையில்லை. வெகு எளிதில் jpg, bmp போன்ற இழைகளை (files-கோப்புகள் என்றும் சிலர் சொல்லுவதுண்டு) txt இழைகளாக மாற்ற முடியும்.
7. உள்ளீடு செய்வதற்குத் தோதாக குயவுப் பலகைகளை (key boards) அறிமுகப் படுத்திய அறி"ர்கள், எழுத்துச் சீர்திருத்தம் பற்றியும் ஓர்ந்து பார்க்க வேண்டும். இது எதிர்காலத்தில் பிள்ளைகள், குறிப்பாகப் புலம் பெயர்ந்தவர்களின் பிள்ளைகள், படிக்க மிகவும் உதவியாக இருக்கும். இந்தச் சிக்கல் பலரும் முட்டிப் பார்த்து நகராத சிக்கல் தான். இந்தச் சிக்கலை எடுப்பதற்குக் கூட தமிழ் அறி"ர்கள் மிகவும் தயங்குகிறார்கள். எடுத்தவர்களைச் சிலர் சரமாரியாகத் தாக்கவும் செய்கிறார்கள். இருப்பினும் அடிப்படை ஏரண வாய்பாடு ஒன்று தொல்காப்பியத்தில் இருக்கிறது. அதற்கு மேல் நாம் ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

## இணைய வழி மகிழாட்டம்: (e-entertainment)

மகிழாட்டம் என்பது வெறும் விளையாட்டுக்கள் மட்டுமல்ல, கலை, இசை, கூத்து போன்றவற்றைக் கற்பதிலும், கணினியும் இணையமும் பெரும் பங்கு வகிக்கப் போகின்றன. சரியான ஆசிரியர்கள் அமைவதிலும், பயிற்சி கொடுப்பதிலும் பல இக்கட்டுக்கள் இருக்கும் இந்நாளில், (குறிப்பாகப் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே இது தீவிரமாக உள்ளது) இந்த மகிழாட்டங்களைத் (entertainment) தமிழ் வழிப்படுத்துவது இன்றியமையாதது. அடுகும், விழிவும், பாடமும் இடையாட்டாய் வரும் பொழுது, சிறாரைப் பலவகையாலும் ஊக்கப்படுத்தி நம் கலைகளைக் கற்க வைக்க முடியும். இந்த மகிழாட்டுகளில், குறுக்குப் புதிர், மின் விளையாட்டுக்கள், மரபார்ந்த விளையாட்டுக்கள் எனப் பல அடங்கும். கற்பனை வளமும் ஈடுபாடும் இருந்தால் இணையத்தால் இங்கு ஏற்படும் வளர்ச்சிக்கு முடிவு கிதையாது.

## முடிப்பு:

இது காறும், பயனர் பார்வையில் தென்பட்டதைக் கூறிவந்தேன். இங்கு நான் சொல்லியிருப்பது , ஏதோ ஒரு தனிமனிதன் கூறியதாக எடுத்துக் கொள்ளாமல், பலரும் பல்வேறு குழாம்களில் கூறியவற்றைத் தொகுத்தளித்ததாகக் கொள்ள வேண்டுகிறேன்.

அதே பொழுது, தமிழ் கணிமை மற்றும் இணையத்தைச் சுற்றிவளைக்கும் இன்னொரு ஆதங்கத்தையும் நான் சொல்லத் தான் வேண்டும்.

தமிழ், இணைய வெளியில் எப்படி வெற்றி கொண்டு வருகிறது; ஆங்கிலம் அல்லாத மொழிகளில் குறிப்பிட்ட பங்கைத் தமிழ் மொழி எப்படி இணையத்தில் ஆற்றிக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் பெருமைப் பட்டுக் கொள்ளுகிறோம். கூடவே, தமிழ் இணையத்தின் வளர்ச்சி பற்றியும் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் இந்த மூன்றாவது கருத்தரங்கு வரை பேசிக் கொண்டிருக்கிறோம்.

இது ஒரு பக்கம் இருக்க, இன்னொருபக்கம் தமிழகத்திலும், புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் "தமிழ்" என்று உள்ளதையே தொலைத்துக் கொண்டிருக்கிறோம். (இதற்கு ஈழம் மட்டுமே விதிவிலக்கு.) மற்ற இடங்களில், தமிழ் போய் தமிங்கிலம் ஆகிக் கொண்டிருக்கிறது. இப்படி 2500 ஆண்டுகளில் மணிப்பவள நடையைப் பயன்படுத்தித்தான், தமிழ் போய்த் தெலுங்கும், கன்னடமும், அண்மையில் மலையாளமும் ஏற்பட்டன. நம் மொழி பேசுவோர் இடமும், மக்கள் தொகையும் குறையத் தொடங்கின. குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட காலம் போய், வடவேங்கடம் தென்குமரியாகி, பின் திருத்தணி-தென்குமரியாயிற்று.

இப்படித் தங்கு தடையில்லாமல் தமிங்கிலம் பேசிக் கொண்டே போனால், நாம் எங்கே போகப் போகிறோம்? எவ்வளவு பேர் கடைசியில் தேறுவோம்? ஒருபக்கம் 3% ஆங்கிலம் தெரிந்தோருக்கு மட்டுமே இந்த கணினி, இணையம் போன்றவை சொந்தமாக இருக்கக் கூடாது, பரவலாக வேண்டும் என்று இந்த அவையில் உள்ளவர்கள் எல்லோரும் பாடுபடுகிறோம். இன்னொரு பக்கம் தாளிகைகளும், கருத்தை உருவாக்குவோர்களும், படித்தவர்களும் ஆகிய நாமே தமிங்கிலத்தைப் பரப்பி 97% பேரை உருவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

நம்மில் பலர் செய்வது முரண்பாடாக இல்லையா? தமிங்கிலத்தை நிறுத்தாமல், அதற்கு முயற்சி செய்யாமல் தமிழ் இணையம் பற்றிப் பேசுவது ஒரு பக்கம் போலியாகத் தெரியவில்லையா? அரசியலார்கள், அறி"ர்கள், படித்தவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் என்ன செய்யப் போகிறோம்? நாம் செய்யும் இரண்டுமே சரியாக இருக்க முடியாதல்லவா? எது சரி?

# தமிழ் மின்னிதழ்கள்

சி. அண்ணாமலை
Chennai

சிங்கப்பூரில் அக்டோபர் 1995-ம் ஆண்டு தமிழை முதலில் இணையத்தில் ஏற்றிய நா.கோவிந்தசாமியும் டாக்டர் டான் டின் வீவும் லியோங்கோக் யாங்கும் எதிர்கால தமிழ் இணையம் பற்றி என்ன நினைத்தார்கள் என்று தெரியாது. ஆனால் மிகக்குறுகிய காலத்தில் தமிழ் இணையம் அசுரமாய் முன்னேறிவிட்டது.

உலக அளவில் இணையத்தில் உயர்ந்துநிற்கும் சிலமொழிகளில் தமிழும் ஒன்று. உலகெங்கும் புலம்பெயர்ந்தும் வேலை நிமித்தமும் சிதறிக்கிடக்கும் தமிழர்கள் மொழியை நேசிப்பதன் காரணமாக நிறைய தகவல்கள் இணையத்தில் கிடைக்கின்றன. அதனால் இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி தமிழ் என்பதுடன் அதிகத்தகவல்களை கொண்ட இந்திய மொழியும் தமிழ்தான் என்றானது.

இந்தநேரம் தமிழ்க்கணினிக்கும் இணையத்திற்கும் பங்காற்றிய அனைவரையும் பாராட்டவேண்டும். அவர்களை கௌரவிக்காவிட்டாலும் தமிழ் உலகத்திற்கு அவர்களை அறிமுகப்படுத்தலாம். வேறெந்த மொழியிலும் நடைபெறாத ஒரு மொழிச்சேவை நடந்துள்ளது என்பதுதான் இதை சொல்லத்தோன்றுகிறது.

மறைந்த எழுத்தாளர் நா.கோவிந்தசாமி தமிழை மிகவும் நேசித்த, பெரும் மனிதாபிமானி. அவர் கணினி, இணையத் தொழில்நுட்ப நிபுணர் என்பது தமிழின் அதிர்ஷடம். இவரது பங்களிப்பு தமிழ் கணினி - இணையத்திற்கும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழை முதலில் இணையத்தில் ஏற்றிய பூரிப்பால் பெருமைபேசிகொண்டிருக்காமல் தமிழுக்குச் செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்தார். தனது சொந்த செலவில் சிங்கையிலிருந்தபடியே சென்னையிலும் ஓர் அலுவலகம் திறந்து பல மின்னிதழ்கள் நடத்தினார். நிதிச்சுமை அழுத்தினாலும் இதழ்களின் தரம் பற்றியே பேசுவார். சிறுபிழை என்றாலும், செய்திகள் இடம்பெற தாமதமானாலும் சென்னைக்கு பேசுவார். அவரது ஆழ்ந்த ஈடுபாடும் உழைப்பும், அர்ப்பணிப்பும் அவரை தமிழ் இணையத்தின் முன்னோடியாக்கியுள்ளது. தமிழ்க்கணினி, இணையம் பற்றிப்பேசும்போது அவரை எப்படி மறக்க முடியும்? இப்படி பலர் பணிசெய்கிறார்கள்.

தமிழ் இணையத்தில் ஏறிய உடன் கணியன், தமிழ்சினிமா, இன்தாம்.... போன்ற வலையகங்கள் உருவாகின. இன்று ஆறாம்திணை, அம்பலம், தமிழ்-தமிழா, திண்ணை, வானவில், தமிழ், தமிழ்நெட், வெப்உலகம், மலேசியநண்பன்... என பல தமிழ் மின்னிதழ்கள் நடத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் அச்சு ஊடகத்தன்மையோடு அப்படியே பக்கங்கள் இடம்பெற்றன. எழுத்து, வடிவமைப்பு வகையிலும் சிறப்பாக இல்லை. ஆனால் இணையத்தில் படிப்பது, இணைப்புகளைப் (LINKS) பயன்படுத்துவது, ஒரே நேரம் பலபேர் படிப்பது, பிழைகளை மீண்டும் திருத்தமுடிவது, பக்கங்கள் பிரச்னையாக இல்லாமல் இருப்பது, உடனடி கருத்துகளை அறிய முடிவது... போன்றவை பிரமிப்பாக இருந்தன. மேலாக, புது ஊடகம் என்பதால் பலரையும் ஈர்த்தது.

இப்பொழுது இணைய இதழ்கலுக்குரிய - தங்களுக்கான தனித்துவத்தை தேட ஆரம்பித்துள்ளனர். அச்சு ஊடகத்திலிருந்து விலகி, இணையத்திற்கான தனித்தன்மைகளை கண்டெடுக்க முனைகின்றனர். புதிய ஊடகத்தில் படிக்கிறார்கள், மௌசின் (Mouse) சொடுக்கலில் பக்கங்களை புரட்டுகிறார்கள்... போன்றவை மட்டும் போதாது அடுத்த கட்டம் போகவேண்டும் என்பதை உணர ஆரம்பித்துள்ளார்கள். அதனால் வடிவமைப்பில் நேர்த்தி, மின்னஞ்சல் வசதி, மின்அரட்டை, தேடுதல் வசதி (Search Engine), பயன்படுத்துவோர் பங்கேற்பு, இணைய விற்பனை, வருவாய்.... போன்றவை கவனம் பெற்றுள்ளன.

அரசு தமிழ் இணையத்தை முன்னெடுத்து ஆரம்பத்திலேயே ஏதாவது செய்திருக்கவேண்டும். உதாரணமாக ஒரு வலையகத்தை, உருவாக்கி அதில் பல பரிசோதனைகளை - முயற்சிகளை செய்திருந்தால், அது இன்றைய பல மின்னிதழ்களுக்கு முன்னுதாரணமாகவும் அதைவிட ஒரு படிமேல் செய்ய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அவற்றின் மூலம் மேலும் பல சிறப்புகள் பெற்றிருக்கும். பல சோதனைகள் - முயற்சிகள்தான் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் வளர்ச்சிக்கும் உதவும்.

இணையத்திற்கான எல்லை வரையறுக்கப்படாத நிலையில், தங்கள் அளவில் நடத்துகிறார்கள். வருவாய் எதிர்கால திட்டமாக உள்ளது. தமிழகத்தில் இணைய வளர்ச்சிக்கான போட்டிகளை விட தங்களின் 'முதன்மை'கள் பற்றி பிரஸ்தாபிவிட்டது கூடுதலாக இருக்கிறது. தங்கள் வலையகத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை வாய்கூசாமல் கூட்டிச் சொல்கிறார்கள். தங்களுக்குள் பகிர்வை மேற்கொள்ளாமல் போட்டி மணப்பான்மை கூடிவருகிறது.

இணையத்திற்கான சிறப்புத்தன்மைகளை - பிரத்தியேகங்களை கணக்கில் எடுக்காமல் தொழில்நுட்பத்தின் புதிய வருகைகள் பற்றி அறியாமல் ஒரு மின்னிதழ் பயனாளிகளை நீண்டநாள் ஏமாற்ற முடியாது. மிகத்தரமான மின்னிதழ்கள் தமிழில் இல்லாதபோதும் படிப்பதற்கு பார்ப்பதற்கு உலகம் முழுதும் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது ஓர் பலம். அவர்கள் தங்களின் கருத்துகளை தெரிவிக்கிறார்கள். சிலர் படைபபுகளையும் அனுப்புகிறார்கள். அவை இடம்பெறுகின்றன. இன்னும் திட்டமிட்டால் இந்தியாபற்றி பிற நாட்டுத்தமிழர்களும் பிற நாட்டுத்தமிழர்கள் பற்றி - அந்தநாடுகள் பற்றி இந்தியத்தமிழர்களும் தமிழிலேயே அறியலாம் இதனால் உலகத்தமிழர்களிடையே ஓர் பிணைப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

கணினி - மோடம் - தொலைபேசி இணைப்பு மூலம் இணையம் பயன்படுத்தப்படுவதால் பயன்பாடு மெல்லத்தான் கூடிவருகிறது. ஆனால் கேபிள் டிவி, செல்போன்மூலம் பயன்படுத்தப்படும்போது பயனாளிகளின் எண்ணிக்கை பன்மடங்காகும். அப்பொழுது விளம்பரங்கள் கிடைக்கும், விற்பனை இணையம் மூலம் நடப்பது கூடுதலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் தொழில் நுட்பத்தை அறிந்து வைத்திருப்பது முக்கியமாகும்.

தகவல்களை - படைப்புகளை வெளியிடுவதோடு இதழ்பற்றிய விமர்சனங்களையும் பயனாளிகளின் கருத்துகளையும் பரிசீலிப்பது முக்கியமாகிறது. இணையத்திற்கு வருபவர்களின் ஒவ்வொரு நிமிடமும் பயன்மிக்கதாக இருக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் ஆர்வம் இழக்கலாம். இதற்கு வடிவமைப்பின் நேர்த்தி, தகவல்களை - படைப்புகளை அவற்றிற்கேற்ப வெளியிடும் உத்தி.... போன்றவை முக்கியமாகும்.

பெரும்பாலான பத்திரிகைகளில் இருக்கிற குழு மனப்பான்மை ஆசிரியரின் அதிகாரம் இங்கு உதவாது. ஒரு குழுவாக இருந்தால்தான் வெற்றியை நோக்கமுடியும் என்பது பலரால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தகவல் தருவோர், வடிவமைப்பாளர், தொழில்நுட்ப வல்லுநர் அனைவரும் கூடி தகவல்களை இணையத்திற்கு ஏற்ப உருவாக்க வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் படைப்பு, வடிவமைப்பு, உத்தி இவற்றின் கூட்டை சரியாகக் கொண்டு செல்லும்; ஓர் முழுமை கிடைக்கும்.

எதிர்காலத்தில் தமிழ் இணையம் நிறையபேரை சென்றடையும் வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது. தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள், முனைவர் மூ.ஆனந்தகிருஷ்ணன் (தமிழக தகவல்-தொழில்நுட்ப பணிமுனைப்புக்குழுவின் துணைத்தலைவர்) போன்றவர்கள் அனுபவம் - ஈடுபாடு - பலரை உற்சாகப்படுத்தும் பண்பு; வேர்ல்ட்டெல் (World Tel)-ன் சமுதாய இணையமையத்திட்டம், சிங்கப்பூர் ஐடிஎன்எஸ்ஸின் தமிழில் வலையகப்பெயரை பயன்படுத்தும் வசதி, எழுத்துருக்களை இறக்காமலேயே படிக்கும் வசதி, கணித்தமிழ் சங்கத்தின் செயல்பாடுகள், பல்வேறு தமிழ் மென்பொருள்கள், மைக்ரோ சாஃப்ட்டின் விண்டோஸ் 2000 ல் தமிழ் இடம்பெற்றிருப்பது, அச்சு ஊடகத்தில் பிரபலமாக இருக்கும் குமுதம், ஆனந்தவிகடன், நக்கீரன், தினத்தந்தி, தினமணி, தினபூமி, ஈழமுரசு, தமிழ்முரசு (சிங்கப்பூர்)... போன்ற பல பத்திரிகைகளின் மின்பதிப்பு, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பிபிசி தமிழோசை... போன்று வானொலிகளை இணையத்தில் கேட்கும் வசதி, இந்தியாவில் முதல்நிலையில் இருக்கும் ரீஃடிப்.காம், இந்தியாஇன்ஃபோ.காம், சத்யம்ஆன்லைன்.காம் ,,, போன்ற வலையகங்களில் இடம்பெற்றுவரும் தமிழ்ச்செய்தி மற்றும் தகவல்கள், பத்திரிகைகளும் டிவிகளும் இணையத்திற்கு அளித்துவரும் முக்கியத்துவம், பொறியியல்கல்வியின் அதிகரிப்பு... போன்றவை தமிழ் இணையத்தை உயர்த்தப்போகின்றன.

மிக முக்கியமாக இணையம் பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகிறது. கணினி, இணையம் படித்தவர்கள்தான் பயன்படுத்தலாம் என்கிற எண்ணம் பரவலாக இருக்கிறது. இதை மாற்ற, இணையம் பற்றிய விழிப்புணர்வுதான் ஒரே வழி. அடிப்படைகளை மக்கள் அறிந்தால்தான் பயன்பாடு கூடும். நாளை கேபிள் மூலம் வீட்டிற்கு இணையம் வந்தாலும் பயன்படுத்தமுடியும்.

அச்சு ஊடகம், தொலைக்காட்சி தொடாத, கண்டுகொள்ளாத விஷயங்களை - துறைகளை இணையம் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் ****** வலுப்படுத்திக்கொள்ளலாம். ஆய்வு பூர்வமாக ஒன்றைப்பார்ப்பது - விவாதிப்பது - முழுத்தகவல்களையும் கிடைக்கச்செய்வது... போன்றவை தமிழ் மின்னிதழ்களுக்கு வலுசேர்க்கும்.

தமிழ் இணையம் வளர மொழிஅறிவும், கற்பனைவளமும் இணையம் பற்றிய நிபுணத்துவமும் அவசியமாகிறது. இந்தக் கூட்டின் தேடல், தமிழ் இணையத்தின் புதிய அத்தியாயத்தை உருவாக்கும்.

286 empty

# ஒரு மின் இதழாளனின் அனுபவங்கள் !

பா. சதீஷ்.
Chennai

ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு முன்னர் இணையத்தில் தமிழ் கால் பதித்த போது இவ்வளவு வேகமான தொரு முன்னேற்றத்தை நோக்கி தமிழ் மொழி செல்லும் என யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இன்று தமிழில் எழுபதாயிரம் தளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல கோடி தமிழ் இணைய வாசகர்கள், தமிழில் தகவல் பரிமாற்றம் என்று காலச்சுழற்சியில் வெகுவான முன்னேற்றம். இத்தகையதொரு புரட்சிக்கு 1995ஆம் ஆண்டு 'போயம்வெப்' மூலம் தமிழ்க் கவிதைகளை வலையில் ஏற்றி வித்திட்ட திரு. நா.கோவிந்தசாமியை தமிழ் இணைய உலகம் என்றும் மறக்க முடியாது.

இந்திய மொழிகளில் தமிழ்தான் முதலில் இணையத்தில் இடம்பெற்றது என்றாலும் தொடர்ந்து தமிழிலேயே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது, தமிழ் இணையத் தளங்களை உருவாக்குவது என்பன போன்ற முயற்சிகள் குறைவாகவே இருந்ததென கூற வேண்டும். இந்த விஷயத்திலும் நா.கோவிந்தசாமியே மீண்டும் முதல் அடி எடுத்து வைத்தார் என்று சொல்லலாம்.

1997ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி அவரது முயற்சியால் 'கணியன் வலையகம்' (வெப்சைட்) உருவானது. எடுத்த எடுப்பிலேயே உலகத் தமிழர்களை இவ்வலையகம் மூலம் இணைக்கும் முயற்சியை துரிதமாகச் செய்தார் நா.கோவிந்தசாமி. அவரது சொந்தச் செலவில் சென்னையில் அலுவலகம் திறக்கப்பட்டது. தமிழக அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு, சமயம் என அனைத்துத் துறைகளின் செய்திகளையும் கணியன் தாங்கி வரத் திட்டமிட்டவர், அதைச் செய்தும் காட்டினார். அப்போது கணியனுக்கு நல்ல வரவேற்பு!

முதல் முறையாக தமிழக செய்திகளை, நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொண்ட உலகத் தமிழர்களுக்கு தாய் மண்ணின் வாசம் நுகர்ந்த திருப்தி; மகிழ்ச்சி. 'கணியன் தமிழ்ச் சேதி' என்ற பெயரில் வாரந்தோறும் தமிழர்கள் தமிழகத்தை இணையம் வழி தரிசித்தனர்.வாராந்திர செய்திகளுடன், பிரமுகர்களின் பேட்டிகள், சினிமா தகவல்கள், சிறப்புத் தொகுப்புகள் என்று கணியன் வளர ஆரம்பித்த அதே வேளையில் மெல்ல மற்ற தமிழ் வலையகங்களும் துவக்கப்பட்டன.

தமிழிகத்தில் பிரசுரமான சுமார் இருபது பத்திரிகைகளில் இடம்பெற்ற முக்கிய அம்சங்களை தாங்கி வந்த கணியன் 'தமிழ்ச்சேதி' உலகை வலம் வந்த போது அதன் வழி பல ஆயிரம் பேர் பயனடைந்தனர். இணையம் இதயங்களை இணைத்து வைக்கிறது என்பது 'தமிழ்ச்சேதி'யின் மூலம் உண்மையானது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இணையம் பற்றிய விழிப்புணர்வு மெல்ல பரவிக் கொண்டிருந்த நேரம் அச்சமயத்தில் கணியன் 'தமிழ்ச்சேதி'யில் தங்கள் பத்திரிகைளின் முக்கிய அம்சங்கள் இடம் பெறுவதற்கு பல தமிழக பத்திரிகைகள் அனுமதி அளித்தது வரவேற்கத்தகுந்த திருப்பம்.

இணையம் பற்றி சரியாக அறிமுகம் கூட இல்லாத போது ஒவ்வொரு பத்திரிகையும் மகிழ்ச்சியாக தந்த ஒப்புதல் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. பயன்படுத்தப்பட்ட கட்டுரை, படைப்புகளுக்கு உரிய மதிப்பை 'தமிழ்ச்சேதி'யும் உரிய முறையில் வழங்கியது. நாட்கள் உருள

உருள சில பத்திரிகைகளும் இணைய உலகில் தங்களை இணைத்துக் கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. குறிப்பாக 'குமுதம்' இதழ் ஆசிரியர் மாலன் குமுதத்தை இணையத்தில் கொண்டு வரத் திட்டமிட்டிருந்தார்.

செய்திப் பிரியர்களுக்குச் செய்தி, நகைச்சுவைப் பிரியர்களுக்கு கிண்டல் பக்கங்கள், கலை, கவிதை, ஆய்வு, பேட்டி, பண்பாட்டு நிகழ்வுகள் என்று தமிழகத்தில் நடந்த பல்வேறு நிகழ்வுகளை, செய்திகளை 'தமிழ்ச்சேதி'யில் இடம்பெறச் செய்ய முடிந்தது. தொடர்ந்து மின்னஞ்சல் அனுப்பி பாராட்டிய வாசகர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களாக கூடிப் போனது . இதழ் வெளியாக தாமதமாகும்போது, எழுத்துப் பிழைகளைக் காண நேரும்போது இணைய வாசகர்கள் கடிந்து கொண்டதையும் விமர்சித்ததையும் மகிழ்வோடு குறிப்பிட வேண்டும்.

முதல் அனுபவம் என்பதாலோ என்னவோ நம் படைப்புகளை பார்த்து, படித்த வாசகர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவித்த வேகம் பிரமிப்பையே ஏற்படுத்தியது. சில நேரம் காலையில் இடம்பெறும் அம்சங்களுக்கு மாலைக்குள் விமர்சனங்கள் தேடி வரும். சில அம்சங்களுக்கோ அவை இடம்பெற்ற அடுத்த சில மணி நேரங்களிலே வாசகர்களின் அஞ்சல்கள் எங்களை நோக்கி ஓடி வரும். இப்படி மின்னிதழ்களுக்கு கணியன் 'தமிழ்ச்சேதி' வழி, பாதை அமைத்துக் கொடுத்தவர் நா.கோவிந்தசாமி என்று கூறலாம்.

இப்போது பல தமிழ் வலையகங்களில் பல மின்னிதழ்கள் உலா வருகின்றன. ஒரே வலையகத்தினுள் பதினைந்து முதல் இருபது மின்னிதழ்கள் வரை வெளிவருவதைப் பார்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கிறது. அச்சு வடிவிலான இதழ்களை பிரசுரிப்பதில் இருக்கும் சிரமங்களை விட மின்னிதழ்களில் குறைவு என்பதை ஏற்றுக் கொள்ள இயணாது.

செய்திகளை சேகரிப்பது, வடிவமைப்பது, கோப்புகளை இணையத்திற்கு அனுப்புவது (அப்லோடிங்), இருக்கும் பிழைகளை களைவது என அச்சு வகை இதழ்களில் உள்ள அனைத்து நடைமுறைகளும், நடைமுறைச் சிக்கல்களும் மின்னிதழ்களிலும் இருக்கவே செய்கின்றன.

கணியன் வலையகம் 'தமிழ்ச்சேதி' எனும் ஒரு வார இதழுடன் தன் பணியை நிறுத்திக் கொண்டுவிடாது புதிய கோணத்தில் நடைபோட்ட விதம் குறிப்பிடத்தக்க ஒன்று. இந்திய சுதந்திர பொன்விழாவைக் குறிக்கும் வகையில் 'இந்தியா 50:50' என்ற சிறப்புத் தொகுப்பு, 'மாணவன்' என்ற மாணவர்களுக்கான இதழ், 'நாடகன்' என்ற கணையம்சமுள்ள இதழ் என்று பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றன.

முதல் முறையாக இணையத்திற்கு என்றே தனிப்பட்டதொரு செய்திப்பிரிவு செயல்பட்டு, இந்திய சுதந்திர வரலாறு முதல் சுதந்திரப் பொன்விழா வரையிலான தகவல்களை, அரிய நிழற்படங்களைத் திரட்டி சிறப்புத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. இந்திய சுதந்திரப் பொன்விழாவிற்கென ஒரு மின்னிதழ் அல்லது இணைய மலர் என்று கூறணாம்.

இணையத்தில் மட்டுமே வெளியான 'நாடகன்' இதழுக்குரிய கட்டுரைகள் சுயமாக எழுதப்பட்டன, பேட்டிகள் எடுக்கப்பட்டன. நாடக எழுத்தாளர்களின் படைப்புகள், விமர்சனங்கள் என்று அனைத்தும் கொண்ட இவ்விதழ் பலரது பாராட்டுகளைப் பெற்றது. ந. முத்துசாமி, கார்த்திகேசு சிவத்தம்பி, சிதம்பரநாதன், மௌனகுரு போன்ற நாடக வல்லுநர்களின் பேராசிரியர்களின் பேட்டிகள் இடம்பெற்றன. பிழ நாடக வரலாறு முன்னுரையாகவும் சில நாடகங்களின் சிறு பகுதிகளும் இடம்பெற்றன.

தமிழகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை மட்டுமே கணியன் கொடுக்க, அதை விரும்பிப் படித்து வந்த இணைய வாசகர்களுக்கு புதிதாக இணையத்திலேயே ஒரு இதழ் தொடங்கப்பட்ட போது உற்சாகத்திற்குக் குறைவேது?!

இப்படி மின்னிதழ்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கும் வழிமுறைகள் மெல்ல உருவாகத் தொடங்கின. அடுத்து வந்த நாட்களில் இணையத்தில் மின்னிதழ்களின் பவனி அதிகமானது. ஒவ்வொரு வாரமும் தமிழக வார இதழ்களில், பத்திரிகைகளில் இருந்து மட்டுமே செய்திகளை எடுத்த நிலை மாறி, கணியன் ஆசிரியர் குழுவின் சார்பாக தனிக்கட்டுரைகள் எழுதப்பட்டன, செய்திகள் சேகரிக்கப்பட்டன.

இணையத்தில் செய்திகளைச் சொல்வதற்கென்றும் கூட தனிப்பாணி இருக்கிறதுதான். மலேசியாவில் வெளியாகும் ஒரு வார இதழில் இருக்கும் பாணியும் தமிழகத்திலுள்ள இதழ்களின் பாணியும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூற இயலாது. உள்ளூர் செய்திகள், அங்குள்ள மொழி வழக்கம் என்று சிற்சில விஷயங்களில் மாற்றம் இருக்கலாம்; இருக்கின்றன. அப்படியெனில் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் தமிழர்களைச் சென்றடையும் ஒரு இணைய இதழில் செய்திகளை, தகவல்களை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதை தீவிரமாக ஆலோசித்து யோசித்து ஒரு செயல்திட்டத்தை உருவாக்கிக் கொண்டோம். அந்தச் செயல்திட்டத்தின்படி வெற்றிகரமாக கணியன் மின்னிதழ்கள் தொடர்ந்து இணையத்தில் உலா வந்தன.

ஒரு வருடத்திற்குள் மீண்டுமொரு மாற்றம்! நடந்து முடிந்த நிகழ்வுகளை சற்றே காலம் கடந்து சொல்வது ஒருவகை. அதே செய்தியை உடனுக்குடன் சொல்வது இன்னொரு வகை. ஆறப்போட்டு படிப்பதைவிட எதையுமே உடனுக்குடன் கேள்விப்படும் போது உற்சாகத்தின் அளவு கூடும் என்பது நிச்சயம். இந்த உற்சாகத்தை இணைய வாசகர்களுக்கு ஏற்படுத்த நா.கோவிந்தசாமி ஒரு நுதென முயற்சியை மேற்கொண்டார்.

தமிழகத்தின் 1997ஆம் ஆண்டு வரவு செணவு அறிக்கையை சென்னை தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பு செய்தது. அந்த நேரடி ஒளிபரப்பை பயன்படுத்திக் கொண்டு, இணையத்தில் தமிழக வரவு செலவு அறிக்கையை உடனுக்குடன் வெளியிட வேண்டும் என்பது நா. கோவிந்தசாமியின் திட்டம். உடனே சென்னையிலுள்ள கணியன் செய்திப்பிரிவிற்கு அவர் எண்ணம் வந்து சேர, நேரடி ஒளிப்பரப்பிற்கென பெரிய குழு அமைக்கப்பட்டது. தொழில்நுட்பக் வல்லுநர்கள், தட்டச்சு உதவியாளர்கள் தவிர, ஆறு செய்தி சேகரிப்பாளர்களைக் கொண்ட குழு அது!

ஆறு செய்தி சேகரிப்பாளர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐந்து மணித்துளிகளுக்கும் தொலைக்காட்சியில் காட்டப்படும் செய்திகளை தொகுக்க வேண்டும். முதலாமவர் முதல் ஐந்து மணித்துளிகளை எழுதி முடிக்கும் நேரத்தில் அடுத்த நபர் அடுத்த ஐந்து மணித்துளிகளை எழுத உட்கார வேண்டும். இதற்குள் முதல் ஐந்து மணித்துளிகளுக்குரிய செய்திகள் இணையத்தில் ஏற்றப்படும். இப்படியாக ஆறு நபர்களும் இணைந்து முப்பது மணித்துளிகள் எழுதுவார்கள். இந்த சுழற்சியானது வரவு செலவு அறிக்கை வாசித்து முடிக்கப்படும் வரை தொடரும். இதுதான் கணியன் ஆசிரியர் குழுவின் திட்டம்.

இதன்படி செயல்பட்டபோது நடைமுறைச் சிக்கல்களை சந்திக்க நேர்ந்தது. ஒருவர் தாமதமாக எழுதுவார், தட்டச்சு உதவியாளர் கைகள் வேகமாக இயங்காது பதற்றமடைவார், தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஏதேனும் சிக்கல்கள், கோப்புகளை வடிவமைப்பவர் பதற்றத்தில்

ஒரு கோப்பிணருந்து மற்றொரு கோப்பிற்கு இணைப்பு கொடுக்க மறந்து போவார் இப்படிப் பண!

இருப்பினும் வரவு செலவு அறிக்கையை நேரடியாக இணையத்தில் கொடுக்கும் திட்டத்திற்கு சென்னையில் இயங்கிய தொழில்நுட்ப குழுவின் செயல்பாடு சிறப்பாக இருந்ததால் சிறப்பாக செயல்பட முடிந்தது. ஆசிரியர் குழுவும் சரியாகச் செயல்பட்டதால் அன்றைய தினம் உலகத் தமிழ் வணையகங்களில் முதன் முறையாக ஒரு நேரடி ஒளிபரப்புத் திட்டம் வெற்றி கண்டது.

தமிழக முதல்வர் கலைஞர் தன் அறிக்கையை வாசித்து முடித்த போது அனைவர் முகத்திாம் வெற்றிப் புன்னகை, நிம்மதிப் பெருமூச்சு! இடையில் ஒருவர் தலைமைச் செயலகம் சென்று வரவு செலவு அறிக்கையை பெற்று வந்தார். மிச்சம் மீதமிருந்த செய்திகளையும் தொகுத்துக் கொடுத்தோம். இந்திய மொழிகளில் இணையத்தில் நுழைந்த முதல் மொழி என்கிற பெருமையுடன், இந்திய மொழி வலையகங்களுள் முதல் நேரடி ஒளிப்பரப்பு சாதனையைச் செய்ததும் தமிழ் வலையகம்தான் என்கிற பெருமை கிடைத்தது.

நேரடி ஒளிபரப்பு கொடுத்த உற்சாகம் விரைவில் இன்னொரு திருப்பத்தைக் கொடுக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அத்தகையதொரு முடிவை நா. கோவிந்தசாமி எடுத்தார். வார இதழ்கள், மாதாந்திர இதழ்கள் என்பன மட்டுமே வந்து கொண்டிருந்த தமிழ் வலையகங்களில் முதன் முறையாக ஒரு நாளிதழைத் துவக்கினார் நா. கோவிந்தசாமி. நாள்தோறும் தமிழக ெ இந்தியச் செய்திகளை ஒரு நாளிதழாக வாசகர்களுக்கு அளிக்கலாமே என்றார்.

யோசனை செயல்வடிவம் பெற்றபோது, 1998ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கணியனின் ஒரு அங்கமாக'தமிழ்' இணைய நாளிதழ் தொடங்கப்பட்டது. அநேகமாக உலகின் முதல் தமிழ் இணைய நாளிதழாக 'தமிழ்' நாளிதழ் இருக்கக்கூடும். தற்போது மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்நாளிதழ் ஒரு வருடத்தின் அனைத்து நாட்களிலும் தொடர்ந்து இந்திய/தமிழகச் செய்திகளைக் கொடுத்து வருகிறது. உலகம் முழுவதிலுமுள்ள பல ஆயிரக்கணக்கானவர்கள் இதைப் படித்து வருகிறார்கள்.

மின்னிதழ்களை விட இணையத்தில் ஒரு நாளிதழை நடத்துவதென்பது இரட்டிப்புச் சிரமங்களைக் கொண்ட பணி எனலாம். முதலல் செய்திகளை திரட்ட வேண்டும், அவற்றை இயன்ற வரை தாமதமின்றி கொடுக்க வேண்டும், பிழை திருத்தம், ஆங்கிலக் கணப்பின்றி கொடுத்தல், கோப்புகளை இணையத்திற்கு அனுப்புதல் (அப்லோடிங்) என்று வரிசையாக பல வேலைகள் உள்ளன. இவை போதாதென்று தொலைபேசி இணைப்பிலும் இணைய இணைப்பிலும் ஏற்படும் சிக்கல்கள். ஆனாலும் இந்த நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் எதிர்கொண்டு எந்தவிதமான தாமதமும் இன்றி தக்க மாற்று ஏற்பாடுகளின் உதவியுடன் 'தமிழ்' இணைய நாளிதழ் தொடர்ந்து செய்திகளைக் கொடுத்து வருகிறது.

கணியன் வலையகத்தில் 'தமிழ்' இணைய நாளிதழ் தொடங்கப்பட்ட முதல் வாரத்திலேயே சவால்மிக்க பணி காத்திருந்தது. இந்திய நாடாளுமன்றத்திற்கும் தமிழக சட்டப்பேரவைக்கும் தேர்தல் அறிவிக்கப்பட, "தேர்தல் முடிவுகளையும் நேரடியாக ஒளிபரப்பைப் போண உடனுக்குடன் வாசகர்களுக்குத் தமிழிலேயே தெரிவிக்கலாமே" என்றார் நா.கோவிந்தசாமி. வரவு செலவு அறிக்கை ஒருநாள் பணி என்றால் தேர்தல் முடிவுகளை தொகுத்துக் கொடுக்கும் பணியானது இரண்டு நாள் தொடர் உழைப்புக் கோரும் பணி.

இருபத்து நான்கு மணி நேரமும் அறிவிக்கப்படும் முடிவுகளை உடனுக்குடன் இணையத்தில் போடுவது, முக்கிய அரசியல் தலைவர்கள், அரசியல் பார்வையாளர்கள், பொதுத்தரப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். முந்தைய தேர்தல் முடிவுகள் எப்படி இருந்தன, தற்போதைய தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பன போன்ற ஆய்வுக்கட்டுரைகள் கொடுக்கப்பட வேண்டும். அதிலும் நாடாளுமன்றத் தேர்தாடன் தமிழக சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடைபெற்றதால் நிறைய விவரங்களை தொகுக்க வேண்டியிருந்தது.

மிகக் குறுகிய கால அவகாசமே இருந்த போதிம் தமிழ் நாளிதழின் ஆசிரியர் குழு இச்சவாணை எதிர்கொள்ளத் தயாரானது. தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து தேர்தல் முடிவுகளை கணியன் தொகுத்து வழங்கியபடியே இருந்தது. முடிவுகள் அறிவிக்கப்பட்ட அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் இணைய வாசகர்களிடம் அதைச் சேர்ப்பித்தோம். சட்டப்பேரவைக்கான முடிவுகள் வேகமாக வெளியான போது சற்றே சிரமமாக இருந்தாலும் நேரடித் தொகுப்பு முயற்சி வெற்றிபெற்றது என்றே கூற வேண்டும்.

ஒரு வருட இடைவெளியில் கடந்த வருடம் இந்திய நாடாளுமன்றத்திற்கு மீண்டும் தேர்தல் நடந்த போதும் இந்த நேரடி தொகுப்பைப் பணியை கணியன் 'தமிழ்' நாளிதழ் செய்தது. தமிழ் வலையகங்களில் இதுவரை எந்த வலையகத்தில் இரண்டு இந்திய தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. ஆனால் கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலை பல தமிழ் வலையகங்கள் மிக அழகாக விரைவாக தொகுத்துக் கொடுத்திருக்கின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.
தேர்தல் தொடர்பான செய்திகளையும் விவரங்களையும் நிழற்படங்களையும் ஏராளமான அளவில் கொடுத்துள்ளது வரவேற்கத்தகுந்த விஷயம்.

மின்னிதழில் ஆரம்பித்து நாளிதழ், நேரடி ஒளிபரப்பு என்று வட்டம் வரிவடைந்த நிலையில் கணியன் வலையகத்திற்கான வாசகர் வட்டமும் விரிவடைந்தது. ஒரு சிங்கை வாசகர் தினமும் 'தமிழ்' நாளிதழ் அச்சிட்டு வைத்து தன் ஆவலகத்திாள்ள மற்ற தமிழ் நண்பர்களுக்கு கொடுத்து உதவுவதாக ஒருமுறை மின்னஞ்சல் அனுப்பிய போது மனம் சிணர்த்துப் போனது. மற்றொரு துபாய் நண்பர், "தீபாவளிக்கு அடுத்த நாள் செய்திகள் தாமதமாக இடம்பெற்றதே- இனிப்புகள் உண்ட மயக்கமோ- இங்கே எங்களுக்குச் செய்தித் தாகம்" என்றபோது மனதில் ஒரு துள்ளல்.

இந்த மின்னிதழ்களையும் நாளிதழையும் நடத்துவதன் மூலம் எந்தவொரு பெரிய வருமானமும் கிடையாது. ஆனால் நல்ல பண தமிழ் இதயங்களைச் சம்பாதிக்க முடியும். நா.கோவிந்தசாமி அவர்கள் இதைத்தான் விரும்பினார். இன்று சில வலையகங்கள் இருபத்து நான்கு மணி நேர தமிழ்ச் செய்திச் சேவையை அளித்து வருவது பாராட்டத்தக்க ஒன்று. பல ஆங்கில தளங்களுக்கு இணையாக தமிழக/இந்தியச் செய்திகளை உடனுக்குடன் அளித்து வரும் தமிழ் வலையகங்களின் எதிர்கால வளர்ச்சி கண்டிப்பாக பிரமிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.
"ஒரு நல்ல பத்திரிகை என்பது அன்றைய சமுதாயத்தின் அன்றைய வரலாற்றின் மனசாட்சி" என்றார் அண்ணல் காந்தி. இதை மெய்பிக்கும் வகையில் தமிழ் மின்னிதழ்களும் இணைய நாளிதழ்களும் நடைபோட்டு வருகின்றன!

முற்றும்